Regd. No. M. 4900. 16 பக்கங்கள்.

குடி அரசு

உள்நாடு வருட சந்தா ரூ. 7-0-0. தனிப்பிரதி 0-2-0.
வெளிநாடு ,, ரூ. 9-0-0 ,, 0-2-6.

மாலை 22 } ஈரோடு 12-2-1949 சனிக்கிழமை } மலர் 23.

ஏனோ பிறந்தாய்?

[★]

பல்லவி.

ஏனோ பிறந்தாய் ஏனோ பிறந்தாய்
இத்தமிழ்நாட்டினில் இருக்கும் ஈரோட்டினில் (ஏ)

அ. பல்லவி.

மானாபிமானம் சிறிதுமில்லாத
மனிதர்களிடையே அறிவுடையோனாய் (ஏ)

சரணம்.

காணார் உனதொரு மாபெருந்தொண்டினை
கருதார் உயர்ந்தநல் திராவிடப்பண்பினை
வீணாய் ஏசுறார் ஆத்திரம்கொண்டுனை
வீசுகின்றார்கள் உன்மேல் வெறுப்பெனும்குண்டினை (ஏ)

பிறந்ததுதான் பிறந்தாய் பிழைத்திட வழிபல
பெரிதுமுணர்ந்த நீயேன் மறுத்தாய் அவ்வழிசெல்ல
மறந்தாய்போலோ மகாத்மா காந்திக்கே ஜே சொல்ல
மக்கள்முனைந்திருப்பர் தலைவனாய் உன்னைக்கொள்ள (ஏ)

கதருடையதனைநீ கழற்றாமல் இருக்கணும்
காங்கரசில் ஊழல்கள் இருந்தாலும் பொறுக்கணும்
மதமா? நம் இந்துமதம் சிறந்ததென்றுரைக்கணும்
மைலாப்பூர் மாம்பலத்தார் மனம்போல நடக்கணும் (ஏ)

பூசிஇருந்தால் உடலெங்கும் விபூதியை
புகழ்ந்திருந்தால் பராசர் முதல் மனுவாதியை
பேசியிருந்தால் திருவிளையாடல் சேதியை
பெற்றிருப்பாய் மிகுந்த பக்தனெனும் க்யாதியை (ஏ)

நாமம் விபூதி கதர் இவைகளைப் போடுவோர்க்கும்
நமச்சிவாயா கோவிந்தா எனச் சொல்லிப் பாடுவோர்க்கும்
பாமரர்களின் மனம் மகிழ்ந்திட ஆடுவோர்க்கும்
பணிந்து குனிந்து செயல் இழந்து இந்நாடு ஏற்கும் (ஏ)

இதனைவிட்டே நீயுமோர் இயக்கத்தை ஆரம்பித்தாய்
இளைஞர் உள்ளங்களில் உன் எண்ணத்தை ஏறவைத்தாய்
அதுவன்றிப் பார்ப்பனீயம் அழிகவென்றேயுரைத்தாய்
ஆரியர் கண்களிலே காரைமுள்ளைப்போல் தைத்தாய் (ஏ)

வி. எஸ். நடேசன்.

மக்கள் சிந்தனைக்கு!

★

விடுதலைபெற்ற நாட்டிலே மக்களின் வாழ்க்கை வளமாக்கப்படவில்லை. கல்வி பரவவில்லை, மக்கள் முன்னேறவில்லை. வெள்ளையன் ஆண்டபோது நாடு எந்த நிலையில் இருந்ததோ அந்த நிலைதான் இன்றும். பல நாட்டு வரலாறுகளிலே நாம் கண்டிருக்கிறோம் நீண்டநாள் வேற்று நாட்டானுக்கு அடிமைப்பட்டுக்கிடந்த நாடு, விடுதலை அடைந்தவுடன் பற்பல மாற்றங்களை அடைந்தன என்று. ஆனால் நம் நாட்டிலோ அத்தகைய நல்ல மாற்றங்கள் ஏற்படாவிட்டாலும், மக்களின் அறிவு அரசியல் துறையிலோ அல்லது சமுதாயத் துறையிலோ விரிவடைந்தது என்ற நிலையையும் காணோம்!

அன்று பேசினர் நாட்டின் தலைவர்கள், இந்தநாட்டுச் செல்வம் வெள்ளையனால் கொள்ளை போகிறது, எனவே வறுமை வாட்டுகிறது மக்களை என்று. ஆனால் இன்று வெள்ளையன் வெளியே போய் ஒன்றரையாண்டாயிற்றே! ஏதாவதுமக்களின் வறுமை போயிற்றா? இல்லையே. மறைந்த உணவுப் பங்கீடும் இன்றுதோன்றுகிறதே. நாட்டிற்குகந்தநல்லதிட்டங்களைத் தீட்டித்தரவும் அதனை அமுலுக்குக் கொண்டுவரவும் ஆன பொறுப்புமிகுந்த மந்திரிகள் தங்களால் ஒன்றும் சாதிக்கமுடியவில்லையே என்று ஏங்குகிறார்களே. ஏங்குவதோடு மட்டுமல்லாமல் அதை வெளிப்படையாகக் கூறுகிறார்களே. நாட்டிற்குரிய நல்ல தலைவர்கள் இவர்கள்; இவர்கள் ஆட்சிபீடத்திலே அமர்ந்தால், நமக்கு ஏதாவது பயன் ஏற்படுமென்று இன்பக் கனவு கண்ட மக்கள், இன்றுபெரியதோர் ஏமாற்றத்தை அடைந்தார்களே. இதை எண்ணிப்பார்க்கவும் இன்றைய ஆட்சிபீடத்தில் உள்ளவர்களுக்கு அவகாசமில்லாமல், தம் சொந்த சுயநல வாழ்க்கைக்குக் கேடுவராமல், தன் பதவியைக் காப்பாற்றினால்போதும் என்ற அளவுக்குச் செயலாற்றச் சக்தியற்றுப்போய்விட்டது இன்றைய ஆட்சியாளருக்கு. ஏன் இந்தநிலை? சிந்திக்கவேண்டாமா மக்கள்?

நாட்டு மக்களின் கல்வி, பழக்க வழக்கங்கள், பண்பாடுஇவைகளை உள்ளபடியே அறிந்திருந்த சுயமரியாதைக்காரர்களுக்கு இந்த நிலை தான் ஏற்படும், என்பது தெரியும் இன்றுள்ள நிலையில் மக்கள் சுயேச்சைபெற்றாலும், என்று. எனவே தான்திராவிடர்கழகம் ஆகஸ்டு 15 தேதியை வரவேற்கவில்லை. வரவேற்காததோடு அதைத் துக்க நாளாகவும் கொண்டாடியது. பிறநாடுகளிலே விடுதலைப் போராட்டத்திலே ஈடுபட்ட மக்களுக்கு வெறும் அரசியல் பொருளாதாரப் பிரச்னைகளே முக்கியத்துவமாயிருந்தது. விடுதலை அடைந்த நாடு பொருளாதாரத்தைத் திட்டங்களின்மூலம் சீர்படுத்திக்கொள்ளலாம். ஆனால் துர்ப்பாக்கியமன இந்த நாட்டில் குறிப்பாகத் திராவிடத்திலே மக்களின் வாழ்க்கை மதத்தை அடிப்படையாகக் கொண்டு அமைந்திருக்கிறது. மனிதனின் வாழ்வும் அவன் மதத்தின் மீது கொண்டுள்ள எண்ணங்களுக்கேற்ப அமைகிறது. சமுதாயம், மதம், கடவுள் நம்பிக்கைகளால் வேரூன்றிப்போய் இருக்கிறது. இந்த எண்ணத்தை மாற்றவோ அல்லது சீர்திருத்தவோ இந்த நாட்டிலே தோன்றிய புத்தரிலிருந்து காந்தியார்வரை, தோன்றிய சீர்திருத்தச்செம்மல்களாலும் இயலவில்லை. இத்தகைய மகாபுருடர்களாலும் செய்ய இயலாத காரியத்தைத்தான் இன்று பெரியார் இராமசாமி செய்ய முனைந்து அதில் ஓரளவு வெற்றியும் பெற்றிருக்கிறார். இந்த வெற்றி இலகுவில் கிட்டியதல்ல. சொல்லொணா இடையூறுகளுக்கிடையே, இன்று மக்களிடையே பகுத்தறிவு ஒளி வீசுவதைக்கண்டு வெண்தாடிவேந்தர் பெரியார் தமது தள்ளாத வயதிலும் அறப்போருக்குத் தலைமைதாங்கி அதிவேகமாக நடத்திவருகிறார்.

இருந்தும் நமது திராவிடச் சமுதாயத்திலே இருக்கவேண்டிய இனவுணர்ச்சி, ஒற்றுமை, சிந்தனை இவை இன்னும் பெரும்பான்மையான மக்களிடையே ஏற்படவில்லை. மக்கள் தங்கள் வாழ்க்கையில் ஏன் இவ்வளவு வறுமையும் துன்பமும் குடிகொண்டிருக்கிறதென்பதைச்சிறிதேனும் சிந்திப்பதில்லை. "எல்லாம் ஆண்டவன் செயல், தலைவிதி" என்று நினைத்து வாளாயிருக்கிறார்கள். பிறநாடுகள் விஞ்ஞான ரீதியிலே வெகு உன்னத வாழ்க்கைவாழும் இந்நாட்களிலே, மனிதன் இங்கே தனது துயரத்திற்குத் தனது தலைவிதியே காரணம் என்று மூட நம்பிக்கை கொள்கிறான். படித்த பணக்காரர்கள்முதல் பாமரர்கள்வரை இந்த எண்ணத்தையே கொண்டிருக்கிறார்கள். மேலைநாட்டுக்காரர்கள் கண்டுபிடித்துக்கொடுத்த அதி அதிசயக்கருவிகளாகிய எலெக்டிரிக் விளக்கு, ரேடியோ இன்ன பிற சாதனங்களையெல்லாம், தன்தினசரி வாழ்க்கையில் உபயோகிக்கும் படித்த அறிஞனும் தனது துன்பத்திற்கு ஆண்டவனே பொறுப்பாளி என்கிறான். கல்விவாடையே இல்லாத ஏழைத் தொழிலாளியும் அங்ஙனமே கருதுகிறான். எனவே சென்ற இரண்டாயிரம் ஆண்டுகளாகவே நம்நாட்டிலே பரம்பரையாக மக்கள் மனதிலே இந்தவிதமான தப்பான எண்ணங்கள் அழுத்தமாகப் பதிந்துபோய் விட்டது. இந்நாட்டிலே சுயமரியாதை இயக்கம் தோன்றிய உடனேயே தான் 'சிந்தனை' என்ற வார்த்தை மக்களிடையே பரவிற்று, மக்கள் சிந்திக்கத்தொடங்கினர். தம்முடைய இருண்ட வாழ்விற்குக் காரணம் கண்டுபிடிக்கத்தொடங்கினர். உழைத்து உழைத்து உருமாறிப்போகும் சமுதாயம், கோவில்கட்டி கும்பாபிஷேகம் செய்யும் சமுதாயம், ஆண்டவனுக்குப் பணத்தை அள்ளி, அள்ளித்தரும் சமுதாயம் ஏன் சூத்திரர்களாக, இழி மக்களாக வாழவேண்டும்? உடல்நோகாமல், பாடுபடாமல் மக்களின் உழைப்பை உறிஞ்சி உன்னத வாழ்வு நடாத்தும் சமுதாயம் ஏன் உயர்ந்த ஜாதியாக வாழவேண்டும் என்று? எனவே பெரியார் அவர்கள் தூவிய சிந்தனை வித்துக்கள் இன்று செடியாக முளைக்க ஆரம்பித்துவிட்டன. இதையறியாத மக்கள், தங்கள் சீர்கேட்டைப் பற்றி இதுவரை சிந்திக்காத மக்கள், இனியேனும் சிந்திப்பார்களாக?

"வாசு"

காட்சி 32.

[வீதி.]

உறுப்பினர்:-வேவா (குடுகுடுப்பை வேடத்தில்), சப் இன்ஸ்பெக்டர், வேலன்.

கதை அமைப்பு:-[வேவா குடுகுடுப்பை வேடம் பூண்டு சப் இன்ஸ்பெக்டரிடமும், மைனர் வேலனிடமும் உளவறிந்து கொண்டு செல்கிறான்]

வேவா:- நல்ல காலம் பிறக்குது...நல்ல காலம் பிறக்குது... நல்ல காலம் பிறக்குது...

சப் இன்ஸ்பெக்டர்:-[ஒரு சிகரட்டைப் பிடித்துக் கொண்டே குடுகுடுப்பையை முறைத்துப்பார்க்கிறார்]

வேவா:-[நழுவி ஓட முயல்கிறான்.]

சப் இன்ஸ்பெக்டர்:- டேய்! குடுகுடுப்பை! இங்கே வாடா...

வேவா:- [சற்று பீதியோடு; ஆனால் சமாளிப்புடன்] நல்ல காலம் பிறக்குதுங்க...நல்லகாலம் பிறக்குதுங்க...நல்ல காலம் பிறக்குதுங்க...

சப் இன்ஸ்பெக்டர்:- டேய்! யாருக்கடா நல்ல காலம்பிறக்குது?

வேவா:-அய்யாவுக்குத்தானுங்க! அய்யாவுக்குத் தானுங்க!! நல்ல காலம் பிறக்குதுங்க...

சப் இன்ஸ்பெக்டர்:- டேய்! நல்லாப் பார்த்துச்சொல்லுடா...?

வேவா:-பார்த்துக்குனா ஆபத்துத்தானுங்க...

சப் இன்ஸ்பெக்டர்:-என்னடா ஆபத்து?

வேவா:-ஒன்னுமில்லீங்க! பிறக்குற காலத்தைப் பாக்கப்படாதுங்க... நல்ல காலம் பிறக்குதுங்க அய்யாவுக்கு நல்லகாலம் பிறக்குதுங்க...

சப் இன்ஸ்பெக்டர்:-ச்சீப் போடாக்! குடுகுடுப்பை!!

[என்று கூறிவிட்டுப் போகிறார்]

வேவா:-[தப்பித்தோம் பிழைத்தோம் என்று சீக்கிரம் செல்ல முனையும் போது, எதிரில் மைனர் வேலனைக் கண்டதும் அவன் பின்னாலேயே சுற்றுகிறார்]

வேலன்:-ஏன்பா! நீயேன் என் பின்னாலேயே சுத்திக்கிட்டிருக்காய்?

வேவா:-[பயங்கரமான குரலில்] வேலா...! என்னையாருன்னுதெரியலே...? நான் தாண்டா உன் காதலி வள்ளியம்மையின்குலதெய்வம்...

[என்று கூறிக் குடுகுடுப்பையை அடிக்கிறார்]

வேலன்:-ஏய்! யாருட்டே உன் வித்தை எல்லாங்காட்டுறே...? அடச் சரித்தான் நிறுத்தப்பா!

வேவா:-[திடுக்கிட்டுக் குடுகுடுப்பை அடிக்கிறதை நிறுத்துகிறான்.]

வேலன்:-என்னுட்டையா நடக்கும்...? என்னை யாருனு நினைச்சுக்கிட்டே...? அந்தக் காலத்துப் பாட்டியினு நினைச்சுப் பயங்காட்டுறியா...? நான் உன் பாட்டனப்பா...பாட்டன்!

வேவா:-டேய்...! திருட்டுப் பயலே...'ரெடிமேட் ஸ்டோர்க்காரங்களை வரச்சொல்லணுமா?

வேலன்:-அய்யய்யோ...! அந்தச் சங்கதி உனக்கெப்படியப்பா தெரியும்?

வேவா:-டேய்! எனக்கா தெரியாது? அண்டமண்டலம் சராசரம், அதலம் சுதலம் தராதலம் பாதாளம் கண்டமட்டும் கொண்ட ஜீவகோடிகள் எந்நேரமும் என் கண்ணெதிரிலேயே இருக்குமடா...

[என்று குடுகுடுப்பையை அடிக்கிறார்]

வேலன்:-அய்யோ! அப்படின்னா...! என் காதலி வள்ளியம்மையின் குலதெய்வம்னு ஏஞ்சாமி புளுகணும்? அந்தக் குட்டிதான் பச்சைச் சூனாமானாவாச்சே! அவள் எசமானியுடைய குலதெய்வத்தைக் கூடப் பரிகாசம் பண்ணுவாளே! நான் அந்தத் தைரியத்திலேதானே உங்ககிட்டே அதிகப் பிரசங்கித்தனமாகப் பேசீட்டேன்...

வேவா:-சரி! அப்படியானால், மன்னித்தோம்! உம். அந்த தாசி கமலா வீடு எங்கே இருக்கு? காட்டுவா?

வேலன்:-அதோ...அந்த மூணாவது வீடேதான்பா; போ!

வேவா:-எது? அதோ அங்கே எலக்டிரிக் விளக்குக் கம்பம் இருக்கே அந்த வீடா?

வேலன்:-சேச்சே! அது நாலாவது வீடு! அது இல்லே. அதுக்கு முன்னாலேயிருக்கே அந்த வீடு தான்...

வேவா:- சரிசரி! பக்தனே...! நான் போய் வருகிறேன்!

வேலன்:-[கொஞ்சம் யோசித்து விட்டு] இந்தாப்பா...உன்னைத்தானே! ஒரே ஒரு சந்தேகம்?

வேவா:-[ஆவேசத்துடன்] இன்னும் என்ன சந்தேகம்...?

வேலன்:-[பயத்துடன்] ஒன்னுமில்லேப்பா! நீபோ!!

வேவா:-அஞ்சாதே! கோழைத் தமிழா! உன் சந்தேகம் என்ன கேள்?

வேலன்:-ஆமாங்? உன் கண்ணெதிரிலே அண்ட சராசரங்களும் தெரியுமென்றாயே...! தாசி கமலா வீடு மட்டும் ஏன் தெரியலை...?

வேவா:-டேய்...! இதுவும் ஒரு கேள்வியா? அண்டமண்டலம் ரெண்டுங்கொண்ட ஸ்ரீ ராமபிரா

(தொடர்ச்சி 13ம் பக்கம்)

கதை கற்பனை.

சிறுகதை

மூன்றாம் பருவம்

வாழ்க்கைப் பாதை!

போட்டி

எண் 9.

முனிசாமி ஒரு பட்டிக்காட்டான். வயது பதினாறுதான் இருக்கும், வாட்டசாட்டமான தேகம்; புன்னகை கொஞ்சம் உருண்டைமுகம்; பின்புறமாக வாரி விடப்பட்டிருக்கும் 'பாகவதர் கிராப்' ஒளிவீசும் கண்கள்; நறுக்கு மீசை; மொத்தத்தில் அவன் ஒரு கட்டிளங் காளை! ஆனால் கொஞ்சம் கருப்பு.

ஒருநாள் அவனிருந்த ஊருக்கு 'பட்டணக்கரைப் பிள்ளையாண்டான்' ஒருவன் வந்திருந்தான். அவனும் வாலிபன்தான். அவனது மேனி மினுக்கையும் பவிசையும் பார்த்த முனிசாமிக்கு, நாமும் அவனைப்போல் நாகரீகமாக வாழ்ந்தாலென்ன என்ற எண்ணம் தோன்றிற்று. வந்த பிள்ளையாண்டான் பட்டணக்கரை வாழ்க்கையைப் பற்றி வேறு அளந்துவிடவே முனிசாமிக்கு வாயில் எச்சில் ஊறியது.

அதற்குமேல் முனிசாமிக்கு அந்தப் பட்டிக்காட்டில் வசிக்கப் பிடிக்கவில்லை. ஒருநாள் அவன் தன் அப்பன்--ஆத்தாளிடம்கூடச் சொல்லிக் கொள்ளாமல் நேரே மதுரைவந்து சேர்ந்துவிட்டான். 'மதுரைக்கோட்டையிலே ஷோக்கா வெள்ளைச் சட்டை வெள்ளை வேட்டி போட்டுக் கொள்ளலாம்; சினிமா பார்க்கலாம்; சிகரெட் குடிக்கலாம்—என்ற நினைவுதான், பாவம்!

எங்கெங்கோ சுற்றியலைந்தான். கண்ட கண்ட பலசரக்குக் கடைகளிலெல்லாம் ஒரு சிப்பந்திவேலை கேட்டுப்பார்த்தான். முன்பின் தெரியாத பையனை, பணப்புழக்கம் அதிகமாய் நடமாடும் இடத்தில் யாராவது வைத்துக்கொள்வார்களா? அரிசி மண்டிகள், காப்பிஹோட்டல்கள், வெற்றிலை—பாக்குக் கடைகள்...... இப்படியே பல இடங்களின் வாசற்படிகளில் ஏறி இறங்கினான். கால்வலிதான் கண்ட பலன்!

ஒருநாள், இரண்டுநாள்......அன்ன ஆகாரம் எதுவுமே கிடையாது. நாற்றமெடுக்கும் குழாய்த்தண்ணீரும் புழுதிக் காற்றுமே அவனது வயிற்றை நிரப்பின. முனிசாமிக்குப் பட்டண வாழ்க்கையிலே வெறுப்புத்தட்டவாரம்பித்தது. ஆனாலும் அந்த பட்டணமோகம் இன்னும் அவனைவிட்டு நீங்கவில்லை.

கடைசியாக, கூலிக்குச் சுமை தூக்கியாவது பிழைக்கலாம் என்றெண்ணி மதுரை ஸென்றல் பஸ் ஸ்டாண்டுக்கு' வந்துசேர்ந்தான். ஆனால் அங்கென்ன முனிசாமிக்கென்றே வேலை காத்துக் கொண்டாயிருக்கிறது? அங்கேயும் பழைய வாடிக்கைக் கூலிகளின் பலத்த போட்டா போட்டியும் உருட்டலும் மிரட்டலும் முனிசாமியின் கடைசி எண்ணத்தையும் சிதறடித்துவிட்டன. எங்கே போவான் பாவம்!

எப்படியாவது தான் தன் வயிற்றை நிரப்ப ஒரு வாழ்க்கைப்பாதை கண்டாகவேண்டும். அதற்கு வகை......?

நெஞ்சில் உரமும் உடலில் வலுவும் இருக்கும்போது, சேவலம் ஒருச்சாண் வயிற்றை நிரப்ப வகையில்லாமலா போய்விட்டது!

கத்தரிக்கோலை கைபிடித்தான் முனிசாமி. அன்றே தன் 'ஆக்கவேலை' யில் ஈடுபட்டுவிட்டான்.

முதல்நாளிலேயே முனிசாமிக்கு நல்ல வருமானம் கிடைத்துவிடவே, இந்தப் புதிய 'தொழில்' செய்வதிலே புதியதோர் உற்சாகம் ஊற்றெடுத்தோடியது, அவனுக்கு. பின்பென்ன சொல்லவாவேண்டும்!

மறுநாளே வாயில் ஒரு 'அக்பர்ஷா' சிகரெட்டுடன், 'பாராஷூட் சில்க் ஜிப்பா, வெள்ளை வேட்டி, பித்தளை மோதிரம் சகிதமாக, பஸ் ஸ்டாண்ட், ரயில்வேஸ்டேஷன் கோயில்குளங்கள் இங்கெல்லாம் வளயம்வரலானான். நல்ல 'வேட்டை' அவனுக்கு.

நாட்கள் சென்றுகொண்டேயிருந்தன! முனிசாமி ஒரு பிரபல 'பிக்பாக்கெட்டாகிவிட்டான். வாழ்க்கைப் பாதையில் அதுவும் ஒரு சுவடுதானே!

* *

அன்றோர் நாள் இரவு!

நேராகச் சென்றுகொண்டிருந்த முனிசாமியின் வாழ்க்கைப்பாதையிலே ஒரு கோணல் ஏற்பட்டது. எவ்வளவுதான் 'நேக்காக'சுத் தன் தொழிலைச் செய்தும்கூட, கையும் மெய்யுமாய்ப் பிடிபட்டுக்கொண்டான், அவன். உடனே அங்கிருந்த அத்தனை தொழில் எதிரிகளும் சண்டியர்களும் முனிசாமியின்மேல் தங்கள் கைவரிசையைக் காட்ட ஆரம்பித்துவிட்டார்கள். இவைகளுக்கெல்லாம் உடல் உரமுள்ள முனிசாமியா அஞ்சப்போகிறான்.

ஆனால் ஒன்றே ஒன்று அவனது மானத்தை வாங்கியது. அது எதுவாயிருக்கலாம்?

சற்று தூரத்திலே ஸென்றல் பஸ் ஸ்டாண்டில் ஆரஞ்சுப் பழம் விற்கும் அவனது காதலி செல்வி கலங்கிய கண்களுடன் இவைகளையெல்லாம் பரிதாபமாகப் பார்த்துக்கொண்டிருந்தாள். அவளது உள்ளம் குமுறியது. உயிர் துடித்தது. இருந்தாலும் ஏன் என்று கேட்கமுடியுமா? கேட்கத்தான் என்ன நியாயமிருக்கிறது?

தனக்காக வருந்தும் ஒரே உயிரான செல்வியைப் பரிதாபமாய் எறிட்டுப் பார்த்தான் முனிசாமி. "செல்வி! இது சகஜம்" என்று கூறுவதுபோலிருந்தது அவனது பார்வை.

அதற்குள் எங்கிருந்தோ ஒரு 'எட்டையா' வந்துமுனிசாமியைக் கழுத்திலடித்துக் கச்சேரிக்கு இழுத்துச்சென்றார். முனிசாமிநம்பிக்கைஒளிவீசும்சிரித்த முகத்துடன் அந்த 'எட்டையாவுடன்சென்றான். அவர், முனிசாமியிடம் 'மாமூல்' வாங்கும் 'எட்டையா' தானே!

சிறிதுநேரம் சென்றது. என்ன ஆச்சரியம்! முனிசாமி பழையபடி அந்த இடத்திற்கே வந்துவிட்டான். ஆனால் அவனது உடைகள்மட்டும் மாறியிருந்தன. எப்படி வந்தான்?

எல்லாம் அந்த 'எட்டையா' தயவுதான்!

திரும்பிவந்த முனிசாமி. நேரே தன் காதலி செல்வியிடம் சென்றான். அவள் சேலை முந்தானையில் முகத்தைப் புதைத்துக்கொண்டு அழ ஆரம்பித்துவிட்டாள். என்னென்னவோ சொல்லிப்பார்த்தான். அவள் முகத்தை வேறுபக்கம் திருப்பிக்கொண்டாள். என் செய்வான் பாவம்?

சிறிதுநேரம் தயங்கிநின்றான். பின்னர் என்ன நினைத்துக்கொண்டானோ தெரியவில்லை; செல்வியின் காதைப்பற்றி அவளது உள்ளங்கையோடு தன் உள்ளங்கையினைச் சேர்த்தவாறு ஏதோ கூறினான்.

அவ்வளவுதான்! இவ்வளவு நேரமாய் அழுது கொண்டிருந்த செல்வியின் முகத்திலே இளநகை யொன்று அரும்பியது. பூரித்துப் போனான் முனிசாமி. அவனது வாழ்க்கைப் பாதையிலே ஒரு பெரும் 'திருப்பம்' ஏற்பட்டு விட்டது.

சில நாட்களுக்கெல்லாம் 'பிக்பாக்கெட்' முனிசாமி, ரிக்ஷாக்கார முனிசாமியாகிவிட்டான். இப்போது அவனை யாரும் அடிக்க முடியாது—மிதிக்கவும் முடியாது. அவன் ஒரு சுதந்திர புருஷன்—பாட்டாளி—செல்வியின்

(தொடர்ச்சி 13ம் பக்கம் பார்க்க)

சுதந்திரப் போர்

அயர்லாந்துச் சுதந்திரப்போர் உலகப் பிரசித்தமானது. சிங்கத்தின் குகைக்குள் சென்று அதன் நாடியைப் பிடித்து உலுக்கிய கதைபோன்றது இது. ஆரிய நாடும் திராவிட நாடும் எப்படியோ அதுபோன்று அயர்லாந்தும் இங்கிலாந்தும் ஒரு வீட்டுப் பாகஸ்தர்கள்.

இழந்த செல்வமும் அடிமை உணர்ச்சியும்.

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் அயர்லாந்திலுள்ள அய்ரிஸ் மக்கள் ஏமாளிகள். தேசீய நலனைப் பற்றிய கவலையே இல்லாதவர்கள். பிரஜா உரிமைக்கு அடையாளமாக இருந்த டப்ளின் பாராளும் மன்றமும் ஒழிக்கப்பட்டது. பார்லிமெண்டரி கட்சியாரும் தேச சுதந்திரத்தைப்பற்றி அதிகமாகக் கவலை கொள்ளவில்லை. பிரிட்டிஸ் ஆட்சியினர் அளிக்கும் பிச்சைப் பட்டங்களையும் அடிமைப் பதவிகளையுமே பெரிதாகக் கருதி வந்தனர். அப்போது தேசீய உணர்ச்சி என்பதே செத்து விட்டது என்றும் கூறலாம். ஆனால் அமெரிக்காவிலிருந்த பினைன் சகோதர சங்கத்தார்; இத்துறையில் துணிவு கொண்டனர். வேண்டிய பணம் சேகரித்து அயர்லாந்துக்கு அனுப்பி, சுதந்திரப் போரைத் தூண்டிவிட்டனர்.

5-வது ஜார்ஜ் மன்னர் விஜயக் கிளர்ச்சி.

காலஞ்சென்ற அய்ந்தாம் ஜார்ஜ் மன்னர் முடிசூட்டு விழாவிற்குப்பின் அயர்லாந்துக்கு விஜயம் செய்தார். அச்சமயம் பகிஷ்காரக் கூட்டங்கள் பலவிடங்களில் ஏற்பாடு செய்யப்பட்டன. யூனியன் ஜாக்கொடி சொக்கப்பான்னகளும் நடந்தன. பிரம்மாண்டமான எதிர்ப்பு ஊர்வலம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டது. இவ்வூர்வலம் நகரின் முக்கிய வீதிகளில் சென்று வுல்ப்டோனில் பொதுக் கூட்டம் கூடிற்று. பழைய பினைன் வீரவுணர்ச்சி மீண்டும்தோன்ற, ஆக்ரோஷமான பிரசங்கங்கள் செய்யப்பட்டன. ஊர்வலத்தின்போது சில அடிதடிகளும் நடந்தன. ஆனால் கைக்குக்கை கலந்த கைவரிசை சண்டைகளுடன் நின்றுவிட்டது. இதை ஆரம்பமாகக் கொண்டு பின்னால் பயங்கர ஆயுதங்கள் கொண்ட போராட்டங்களும் நடந்தன.

சுதந்தரக் கோரிக்கை.

அல்ஸ்டர் மாகாணத்தில் 1913-ம் வருடம் எட்வர்டு கர்சன், ஹோம்ரூல் சட்டத்தை எதிர்ப்பதற்காகக் கிளர்ச்சியை ஆரம்பித்தார். இதுவே ரிபப்ளிக்கர்களுக்கும் தகுந்த சமயமாக வாய்த்தது. "ஆரஞ்சு மனிதர்கள் இங்கிலாந்தை எதிர்த்தால் நாங்களும் அதையே செய்வோம். அவர்களுக்காவது எங்களுக்கும் ஆகட்டும்" என்று வாதாடினர். டப்ளினில் பெரியதோர் கட்டடத்தில் பொதுக் கூட்டம் ஏற்பாடாயிற்று. ஏழாயிரத்துக்கு மேற்பட்டவர் அக்கூட்டத்தில் நெருங்கி நிறைந்திருந்தனர். வீதியிலும் ஏகப்பட்ட கூட்டம். போக்குவரத்து, கூட்டம் முடிவுவரை தடைப்பட்டது. வெளியரங்கமாகக் கூட்டம் நடந்தது. அப்போது ஆயிரக்கணக்கான வாலிபர்கள் புதிய தொண்டர்படையில் பதிவு செய்துகொண்டனர்.

மகாயுத்தமும் படையில் பிரிவும்.

இச்சமயம் 1914-ம்ஆண்டு அய்ரோப்பிய மகாயுத்தம் ஆரம்பமாயிற்று. இத்தொண்டர்படையில் இரண்டு கட்சிகள் ஏற்பட்டன. ஒன்று மகாயுத்தத்தில் இங்கிலாந்துக்கு உதவி செய்தால், சுதந்தர அயர்லாந்து ஏற்படுத்த மன்னர்பிரானும் பார்லிமெண்டும் முன் வரக்கூடுமென்ற நம்பிக்கை கொண்ட கொள்கையுடையகட்சி. மற்றொன்று, "எரியும் வீட்டில் பிடுங்கினது லாபம்" என்றபடி "இங்கிலாந்திற்கு நெருக்கடி ஏற்பட்டால் அயர்லாந்து லாபம்பெற அதுவே நல்ல சமயம்." என்ற கொள்கை கொண்டவர்கள். முதல் கட்சியார் தம்மைத் "தேசியத் தொண்டர்படையின" ரென்றும், இரண்டாவது கட்சியார் தம்மை "அய்ரிஸ் தொண்டர்படையின" ரென்றும் கூறிக்கொண்டனர்.

நாடுகடத்தப்பட்ட பிரபல பினைன் தலைவரான, ஓடோனோவன் ரோசர், 1915-ம் ஆண்டு ஜூலைமாதம் நியூயார்க் நகரில் காலமானார், அவர் சடலம் தாய்நாட்டிற்குக் கொண்டுவரப்பட்டது. அவரை ராணுவ மரியாதைகளுடன் அடக்கம் செய்ய அய்ரிஷ் தொண்டர்படை ஏற்பாடு செய்தது. இத்தலைவர்பால் அன்பு கொண்டவர்கள் பல்லாயிரக்கணக்காக இங்கிலாந்திலிருந்தும் ஸ்காட்லந்திலிருந்தும், இச்சவச் சடங்கில் கலந்துகொள்ள வந்தனர். ஸ்பெஷல் ரயில்களும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. இடுகாட்டு முன் வாசல்முன் நெடுக 20-ஆயிரம் ஜனங்களுக்குமேல் குழுமியிருந்தனர். அய்ரிஷ் தொண்டர்படையினர், பச்சை நிற உடுப்பணிந்து நகர வீதிகளில் அணிவகுத்துச் சென்றபோது, ஜனங்கள் யாவரும், அவர்களை உற்சாகப்படுத்தி, தங்கள் விசுவாசத்தைத் தெரிவித்துக்கொண்டனர். அந்நாள்முதல் தேசீயத் தொண்டர்படை மறைந்துவிட்டது. அய்ரிஷ் தொண்டர்படை மதிப்புப்பெற்றது.

அய்ரிஷ் தொண்டர்படை அடுத்த போராட்டத்திற்குத் தயாராயிற்று. 1916-ம் ஆண்டு மார்ச்சு மாதம் செய்ன்ட் பாட்ரித் திருநாளன்று அய்ரிஷ் தொண்டர் படையினர் துப்பாக்கிகளுடனும், கத்திகளுடனும் அணிவகுத்து தங்கள் திறமையை பரிட்சை காட்டினர். சுதந்திரப்போர் ஆரம்பிக்க ஒருநாளும் குறிப்பிட்டு நிர்ணயம் செய்தனர்.

போர் ஆரம்பம்.

ஈஸ்டர் வாரத்திற்கு முன்னைய வெள்ளிக்கிழமை சர் ரோஜர் கேஸ்மெண்ட் கைது செய்யப்பட்டதாகச் செய்தி கிடைத்தது. ஜெர்மானிய சர்க்காரிடம் படையும் ஆயுதங்களும் உதவி கேட்கும் பொருட்டே இவர் ஜெர்மன் சென்றார். ஆனால் ஜெர்மானியர்உதவி செய்ய மறுத்துவிட்டனர். வெறுங்கையோடு இவர் தன்நாட்டிற்குத் திரும்பி வரும்போதுதான் கைதியானார். கதைத் தலைவர்கள் ஜெர்மன் உதவியைப் பெரிதும் நம்பியிருந்தனர். ஆனால் ஏமாற்றமடைய வேண்டியதாயிற்று. சர். ரோஜர் எதிரிகள் கண்களில் படக்கூடாதென்ற ஏற்பாட்டின்படி, கப்பலிலிருந்து இறங்கி இரகசியப் படகு மூலம் பன்னாஸ்டான்டிற்குச் சென்றார். இங்குதான் அய்ரிஸ் தலைவர்கள் சிலரைச் சந்திக்க வேண்டுமென ஏற்பாடாகியிருந்தது. ஆனால் தலைவர்கள் இங்கு வரவில்லை. இவர் அடையாளத்தைத் தெரிந்து கொள்ளாத ஒரு அய்ரிஸ்காரன் இவரைப் பகைவரிடம் காட்டிக் கொடுத்துவிட்டான்.

இச்சம்பவத்தைக் கேட்டதும் முன் நிர்ணயித்தபடி ஈஸ்டர் விழாவின் போது ஆரம்பிக்க வேண்டிய போர் தொடக்கமாகிவிட்டதென்பதை அயர்லாந்திலுள்ள யாவரும் அறிந்தனர். அய்ரிஸ் தொண்டர்படை டப்ளின் தலைமைத் தபாலாபீசை தமது படைவீடாகக் கொண்டது. தபாலாபீசை மூடும்படி போலீசார்உத்திரவிட்டதும், அது தொண்டர் வசமானதும், போர் ஆரம்பமான செய்தியும் வெகுவிரைவில் எங்கும் பரவலாயிற்று. உடனே ராணுவமும் இங்கிலாந்திலிருந்து வந்தது. தொண்டர்கள்பாடு திண்டாட்ட

மாகிவிட்டது. எவ்வளவோ கஷ்டத்தின் பேரில், தொண்டர்களும் டப்ளின் நகரை, ராணுவப்படையினர் கையில் அகப்படாமல் தீரத்துடன் காத்து நின்றனர். முற்றுகையை அதிக நாள் நீடித்து நடத்தக் கூடாதென எண்ணி தொண்டர் படை நேருக்கு நேர் எதிர்க்கலாயிற்று. பயங்கரப்போர் நிகழ்ந்தது. துப்பாக்கிப்பிரயோகங்களும் நடந்தன. சிறைச்சாலைகளும் நிரம்பின. இக்கலகத்தினை முன்னின்று நடத்திய முக்கிய தலைவர்கள் சுட்டுக்கொல்லப்பட்டனர். அதிர்ஷ்டவசமாகத் தப்பிப் பிழைத்தவர் டிவாலரா ஒருத்தர்தான்.

பிரிட்டிஷ் சர்க்காருக்கு எதிர் சர்க்கார்.

1918-நவம்பரில் சின் பீனியில் பொதுத் தேர்தல் நடந்தது. தேர்தல் அபேட்சகர்கள்; வெஸ்ட்மினிஸ்டருக்குப் போகக்கூடாதென்றும் டப்ளினிலேயே இருந்து சட்ட சிருபை சபைகளை நடத்தவேண்டுமென்றும் நிபந்தனையின்பேரில் பொது ஜனங்கள் ஓட்டளித்தனர்.

இந்த ஏற்பாட்டின்படி அய்ரிஷ்சுயாட்சிதீவிர முன்னேற்றம் அடைந்தது. டெய்ல் இரியன் என்ற அய்ரிஷ் ரிபப்ளிக் புரட்சி சர்க்கார் தோற்றமாயிற்று. டப்ளின் மாளிகையிலிருந்த பிரிட்டிஷ் பிரதிநிதியின் ஆட்சி புறக்கணிக்கப்பட்டது.

மைக்கேல்காலின்ஸ் பொருளாதாரப் பொறுப்பை ஏற்றுக்கொண்டார். 1919-ம் ஆண்டு புரட்சி சர்க்கார் கடன் பத்திரங்களும் 4,00,000 பவுனுக்குப் பிறப்பித்தனர். அய்ரிஷ் தொண்டர் படை அய்ரிஷ் ரிபப்ளிக் ராணுவப் படையாக மாறிற்று.

யுத்த ஆரம்பம்

இந்த புரட்சிச் சர்க்காரை ஒழிக்க இங்கிலாந்தும் நடவடிக்கைகள் எடுக்கலாயிற்று. ரிபப்ளிக் ராணுவமும் எதிர்ப்புக்குத் தயாராயிற்று. யுத்தம் மூண்டது. ரிபப்ளிக் சர்க்கார் சட்டவிரோதமானதென மன்னரால் பிரகடனம் செய்யப்பட்டது. புரட்சித் தலைவர்களும் மந்திரிகளும் கைதுசெய்யப்படுவார்களெனப்பயமுறுத்தப்பட்டது. ஆனால் தலைவர்களை அரஸ்டுசெய்வது இள்ளுகிரையாக இருக்கவில்லை. அவர்களைக் கைதுசெய்ய வேண்டுமானால் முதலில் அவர்களைக் கண்டு பிடிக்கவேண்டும். அதுதான் முடியாத காரியமாக இருந்தது.

இங்லீஷ்படை கண்ணில் மண்.

டப்ளின் நகரம், நகர போலீஸார், ரகசியப் போலீஸ் இலாக்காக்களின் கண்காணிப்பிலும், மற்ற பிரதேசங்கள் ராயல் அய்ரிஸ் போலீஸ் இலாக்கா கண்காணிப்பிலும் இருந்தன. போலீஸ் உதவியில்லாவிட்டால் இங்கிலாந்திலிருந்துவந்த ராணுவம் என்ன செய்ய முடியும்? தலைவர்களையும் மந்திரிகளையும் எப்படி அடையாளம் தெரிந்து கைதுசெய்ய முடியும்?

அதனால் ரிபப்ளிக் சர்க்கார் ரகசிய போலீஸ் ஆதிக்கத்தை தமது கைக்குள் அடக்கிக்கொண்டனர். மைக்கேல் காலின்ஸ் இரகசியப் போலீஸ் இலாக்காவின் டைரக்டர் பொறுப்பை ஏற்றுக்கொண்டார். இப்போது தலைவரான காலின்ஸ் உத்தரவில்லாமல் ரகசியப்போலீஸ் இங்கிலீஸ் ராணுவத்துடனோ, லண்டன் சர்க்காருடனோ எந்தவிதமான போக்குவரத்தும் வைத்துக்கொள்ளமுடியாது. அதனால் இங்கிலீஸ் ஜம்பம் இங்கு நடக்கவில்லை. தோல்வியை ஒப்புக்கொண்டு லண்டன் ஏஜண்டுகள் ஊர்திரும்பவேண்டியதாயிற்று.

போர்ப் படைவீடு

இந்தச் சட்டவிரோத சர்க்காரின் காரியாலயம் இரண்டு அடுக்கு மாடி வீடொன்றில் இருந்தது. அந்த வீட்டின் முதல் தளத்தில் ஒரு மேஜை, ஒரு டைப்ரைட்டர் இவ்வளவே தென்பட்டன. மற்றவைகளெல்லாம் மாயக் காட்சிகள்தான். இந்த வீட்டின் பின்புறம் பல ஏக்கர் விஸ்தீரணம்கொண்ட நெருங்கிய அடவி. இந்த அடவியின் மூலமாகத்தான் டாக்டர் காலின்ஸ் பல தடவை பகைவரிடமிருந்து தப்பி ஓடினார். புரட்சி சர்க்காரில் சம்பந்தப்பட்ட ஒவ்வொரு தலைவரும், ஒவ்வொரு மந்திரியும், அதிகாரியும் தலைமறைந்து வாழவேண்டியிருந்தது. சிலர் வீட்டைவிட்டு வெளியில் வர முடியாமல் உள்ளேயே பல மாதங்கள் தூங்கிக் கொண்டிருக்க வேண்டியிருந்தது. மறைந்துகொள்வதற்கேற்ற பல ரகசிய அறைகளும், பத்திரங்கள் முதலியவற்றைப் பாதுகாக்க கண்ணுக்குத் தெரியாத ரகசிய அலமாரிகளும் இயக்க அங்கத்தினர்களாலேயே அமைக்கப்பட்டன. ரிபப்ளிக் படை வீரர்களோ ஒவ்வொரு நாளும் வேறு வேறு வீடுகளில் தூங்கவேண்டியதாயிற்று. இரவில்ரகசியமாக ஒருவீட்டை அடைந்து தூங்குவர், மறுநாள் ரகசியமாக வெளிக்கிளம்பிவிடுவர். அப்படியிருந்தும் இந்தப் போக்குவரத்தை மன்னர் ராணுவம் அறிந்துகொள்ளலாம் என்ற சந்தேகத்தின்பேரிலேயே, ஒரேவீட்டில் இரண்டுநாள் தொடர்ந்து தங்குவதில்லை.

காலின்ஸ், தமது இரகசியபோலீஸ் இலாக்காக்களின்மூலமாகத் துரோகிகள், ஒற்றர்கள் முதலியோரின் நடவடிக்கைகளை சிதறடித்துவந்தார். காவல்காரர்கள் சாரணர்படை, பணிப்பெண்கள், தபால் சேவகர்கள், சின்னஞ்சிறு குழந்தைகள்கூட ரிபப்ளிக் இயக்கத்திற்கு உளவு தெரிவிப்பவர்களாக மாறிவிட்டனர். லண்டன் ராணுவத்தின் ஒவ்வொரு நடவடிக்கைகளும் உடனுக்குடன் ரிபப்ளிக் தலைவர்கள் அறிந்துவந்தனர்.

இருந்தும் துப்பாக்கி மருந்து கிடைப்பதுதான் கஷ்டமாக இருந்தது. வெடிமருந்துகள் உள்ள இடங்களும் துறைமுகங்களும் அதிக ஜாக்ரதையாகப் பாதுகாக்கப்பட்டன. தப்பித்தவறி தனியாகவுள்ள போலீஸ் டாணாக்களைத்தான் புரட்சிப் படை தாக்கி, அவர்களிடமிருந்த மருந்தைக் கைப்பற்ற முடிந்தது. சில போலீஸ் மிஷின் துப்பாக்கிகளையும் பீரங்கி மோட்டார்களையும் கைப்பற்றினர். இவர்களின் துணிச்சலைக்கண்டு போலீஸாரும் அதிக ஜாக்கிரதை அடைந்தனர். அதனால் போராட்டம் அதிகத் தீவிரமாக நடந்து வந்தது.

பிரிட்டிஷ் திகைப்பும் படுகொலையும்.

இந்தப் போராட்டத்தில் பலர் உயிர் இழந்தனர். பிரிட்டிஷ் ராயல் அய்ரிஸ் போலீஸ் படைக்கு ஆளில்லாமல் சர்க்கார் திண்டாட வேண்டியதாயிற்று. அப்போலீசில் சேர அய்ரிஷார் மறுத்துவிட்டனர். அதனால் இங்கிலாந்திலிருந்த மாஜி சிப்பாய்களுக்கு அதிக சம்பளம் கொடுத்து இப்போலீஸ் படையில் சேர்த்தனர். ராணுவமுறுக்கத்தில் இந்த மாஜிகளும் அய்ரிஸ் ரிபப்ளிக் படையினர் பலரைச் சுட்டுத் தள்ளினர், பல தொண்டர்கள் படுத்த படுக்கையில் படுகொலை செய்யப்பட்டனர். சாதாரண பொதுஜனங்கள் சிலரும் பலியானார்கள். ஆயுதம் தாங்கிய போலீஸ் படைகளும் பீரங்கி மோட்டார்களும் சதா வீதி வீதியாகச் சுற்றிக் கொண்டேயிருக்கும். ஏராளமான உதவிப் படைகளும் டப்ளினிலும் பிரதான இடங்களிலும் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தனர்.

இருந்தும் புரட்சிக்காரர்கள் தீவிரமாகப் போராடினர். புரட்சிக்காரர்களின் ரகசியப் போலீஸ் இலாக்காவும் ஆச்சரியப்படும்படி வேலை செய்து வந்தது. தபாலாபீஸ்களையெல்லாம் சோதனையிட்டு முக்கிய கடிதங்களைக் கைப்பற்றினர். லண்டன் சர்க்கார்—அதிகாரிகள் கடிதப் போக்குவரத்து ரகசியங்களைத் தடை செய்தனர். இம்மாதிரி சோதனையினால் ஒரு சமயம் புரட்சித் தொண்டர்கள் ஏழு ராணுவ அதிகாரிகளின் இரகசிய இருப்பிடத்தை அறிந்து அவர்களைச் சுட்டுக்கொன்றனர். அடிக்கடி தெருக்களிலும் போராட்டங்கள் நடந்தன.

(தொடர்ச்சி 12ம் பக்கம் பார்க்க)

வடநாட்டார்-தென்னாட்டார்!

★

[வடநாட்டார் — தென்னாட்டார் என்கிற பேச்சு ஏன்? எல்லோரும் ஒரே நாட்டார்தானே! இதுதான் இன்றைய வடநாட்டு ஏகாதிபத்தியக்காரர்களின் முழக்கம்.

வடக்கும்-தெற்கும் வெவ்வேறு திசைகள்! இயற்கையாகவே வெவ்வேறாய் அமைந்தவை! என்பதை வற்புறுத்தப்போதுமானது அந்தச் சொற்கள். இருந்தாலும், இந்தக் குறிப்புகளையும் படியுங்கள் என்கிறார் இந்தக் கட்டுரை எழுதிய தோழர்.

இவர் 5, 6 ஆண்டுகளாக வடநாட்டில் வாழ்ந்து வருபவர். வடநாட்டவர்களோடு ஓரளவு நெருங்கிப்பழகியவர். அந்தப் பழக்கத்தை அடிப்படையாகக் கொண்டு இந்தக் குறிப்புகளைத் தந்திருக்கிறார். ஆனால் இதில் இடம்பெற வேண்டிய குறிப்புகள் இன்னும்பலவுண்டு. இவற்றை நினைவில் வைத்துப் பின் கூறுங்கள் வடநாட்டவரும்—தென்னாட்டவரும் ஒரே நாட்டவர்தானா? [ஆ—ர்]

நிறம்:- தென்னாட்டார் மிகுதியும் கருப்பு நிறமானவர்கள். வட நாட்டார் மிகுதியும் வெள்ளை நிறமானவர்கள்.

மொழி:- தென்னாட்டில் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் முதலிய பெருமொழிகள் நான்கு உண்டு. ஆனால் நான்கும் அவற்றைச் சேர்ந்த வேறு சிலமொழிகளும் ஒன்றொடொன்று தொடர்புடையவை. வடநாட்டில் எண்ணிக்கைக்கு அடங்காத பல மொழிகள் உண்டு. ஆனாலும் இவைகளில் ஒன்றுகூட தென்னாட்டு மொழிகளுடன் கலந்தவை அல்ல.

உடை:- தென்னாட்டார் (ஆண்கள்) அரைக்குக் கீழ் ஆடையாக, வேட்டியும், உடம்பை மறைக்க அரைக் கை சர்ட்டும் போடுவார்கள். வடநாட்டார் அரைக்குக் கீழ் ஆடையாக, பைஜாமா என்று சொல்லப்படும் கால்சட்டையையும் (பண்டிட் நேரு போடுவதுபோல) உடம்பை மறைக்க நீள கைகள் உள்ள சர்ட்டும் போடுகிறார்கள்.

தென்னாட்டார் பிரயாணச் சமயங்கள் தவிர, பெரும்பாலும் பாதங்களுக்குச் செருப்புப் போடுவதில்லை. வடநாட்டார் எப்போதும் பாதங்களுக்குச் செருப்பு போட்டிருப்பார்கள். இது நாகரீகமாய்த் தெரிந்தாலும் இவர்கள் நாகரீகத்திற்காகவோ, சுகாதார விதிப்படியோ போடுவதில்லை. ஏதோ தங்கள் முன்னோரால் உபயோகிக்கப்பட்டதால் தாங்களும் உபயோகிப்பதாகச் சொல்கிறார்கள். தென்னாட்டுப் பெண்கள் உடைக்கும், தென்னாட்டு ஆண்கள் உடைக்கும் எவ்விதச் சம்பந்தமும் இராது. ஆனால் வடநாட்டில் ஆண்கள், பெண்கள் உடைகளுக்குக் குறிப்பிடத்தக்க வேற்றுமைகள் எதுவும் கிடையாது.

தென்னாட்டில் ஆண்கள் கட்டும் வேட்டியும், பெண்கள் உடுக்கும் சேலையும் அரைக்கு மேலாக உள்ள தொப்புள் மறையக் கட்டுவார்கள். வடநாட்டில் ஆண்களும், பெண்களும் தொப்புளுக்குக் கீழாகவே உடை உடுப்பார்கள். தென்னாட்டுப் பெண்கள் தங்கள் மார்பை மறைக்கச் சேலையின் ஒரு பகுதியையும், சட்டையையும் உபயோகிக்கிறார்கள். வடநாட்டுப் பெண்கள் தங்கள் மார்பை மறைக்க சட்டையைமட்டும்தான் உபயோகிக்கிறார்கள். தென்னாட்டுப் பெண்கள் அரைக்கை சட்டைதான் உபயோகிக்கிறார்கள். வடநாட்டுப் பெண்கள் நீளக்கைச் சட்டையை உபயோகிக்கிறார்கள். தென்னாட்டுப் பெண்கள் முகத்தை மூடுவதே இல்லை. வடநாட்டுப் பெண்கள் முகத்தை மூடத் தனியாக 4 முழத் துணியை உபயோகிக்கிறார்கள்.

ஆகாரம்:- தென்னாட்டார் அரிசியைத் தங்களுக்கு வேண்டிய விதமாகப் பக்குவம் செய்து, தனியாக குழம்பு என்னும் ஒருவகை ரசமும், தனியாக காய் கிழங்குகளையோ அல்லது மாமிசம் அல்லது மீனையோ பலவகை கடைச்சாமான்களுடன் சேர்த்து, நன்றாய் வேகவைத்து ஆகாரத்துடன் சேர்த்துச் சாப்பிடுவார்கள்.

வடநாட்டார் இதற்கு நேர்மாறாக கோதுமை, அல்லது சோளமாவை தண்ணீர் விட்டுப் பிசைந்து, வட்டமாகத் தோசை போல் செய்து நெருப்பில்போட்டுசுட்டபின், வெங்காயத்தை கடித்துக்கொண்டு அந்த தோசையைத் தின்கிறார்கள். பண்டிகை நாட்களில் ஒருவகைகுழம்புசெய்கிறார்கள். அதில் தென்னாட்டார் ஆகாரத்துடன் சேர்க்கும், புளிப்புத் தரக்கூடியதும், உரைப்புத் தரக்கூடியதுமான பொருள்களில் ⅛ (அரைக்கால்) பாகமும், உப்பு மஞ்சள் 2½ பாகமும் சேர்க்கிறார்கள். அதாவது தென்னாட்டார் சேர்க்கும் புளிப்பு, உரைப்பில் இவர்கள் அரைக்கால்பாகம்தான் சேர்க்கிறார்கள். ஆனால் உப்பு மஞ்சள் அதிகம் தின்கிறார்கள். தேநீரில்கூட உப்பு சேர்க்கிறார்கள் என்றால் பாருங்களேன். தென்னாட்டார் உரைப்புள்ள பண்டத்தை அதிகம் சாப்பிடுகிறார்கள், வடநாட்டார் இனிப்பான பண்டங்கள்தான் அதிகம் சாப்பிடுகிறார்கள்.

குடி:- தென்னாட்டில் மிகச்சிலரே, மதுபானம், புகைபிடித்தல் முதலிய பழக்கங்கள் கொண்டவர்கள். வடநாட்டில் மதுபானம் குடியாதவர்களே கிடையாது. அதாவது மதுபானமும், புகைபிடித்தலும் இங்குள்ள பெண்களுக்குக்கூட விலக்கில்லை. சீக்கியர்கள் புகைபிடிக்கமாட்டார்கள். ஆனால் மதுபானக்குடியில் மிகவும் பேர்போனவர்கள். தென்னாட்டார் பெரும்பாலோர் காப்பிதான் குடிப்பார்கள், வடநாட்டார் பெரும்பாலோர் தேநீர் தான் குடிப்பார்கள்.

சுத்தம்:- தென்னாட்டில் கூழையும் குளித்துக்குடி, கந்தையையும் கசக்கிக் கட்டு என்ற சொல் அனுசரிக்கப்படுகிறது. ஆனால் வடநாட்டாரோ சமயம் கிடைத்தால் தான் வாரத்தில் ஒரு நாள் குளிப்பார்கள். வடநாட்டுப்பெண்கள் குளிப்பது மிக, மிக அரிது. வடநாட்டார் உடைகளில் இதனால் துணிப்பேன் பற்றிக் கொள்கிறது. இவர்கள் குடியிருக்கும் வீட்டைவைத்திருக்கும் சுத்தம், தென்னாட்டு சேரிகளின் தெருக்கள் கூடச்சிரிக்கும். வடநாட்டார் வீட்டிற்குள், மூத்திரமும் எச்சிலும் மலிந்து ஈக்களால் எப்பொழுதும் நிரம்பி இருக்கும்.

தென்னாட்டார் ஆகாரம் உண்ணும் போது தங்கள் வலது கையைத்தான் உபயோகிப்பார்கள். வடநாட்டார் ஆகாரம் உண்ண இடது கையை உபயோகிக்கிறார்கள். தென்னாட்டார் மலஜலம் கழித்தபின் கால்கழுவக் குறைந்தது 1 பவுண்டு தண்ணீரையும் இடது கையையும் உபயோகிக்கிறார்கள். ஆனால் வடநாட்டார் 4 அவுன்ஸ் தண்ணீரையும் வலது கையையும் உபயோகிக்கிறார்கள். தென்னாட்டார் பல் துலக்குவதைத் தங்கள் காலைக் கடன்களில் ஒன்றாக எண்ணுகிறார்கள். ஆனால் வடநாட்டாரோ பல்துலக்குவதே கிடையாது. சிலசமயங்களில் தங்கள் உடையினால் பல்லைத் தேய்த்துக் கொள்கிறார்கள்.

தென்னாட்டார் பேசும்போது வாயிலிருந்து பெரும்பாலோர்க்குத் துர்க்கந்தம் வருவதில்லை. ஆனால் வடநாட்டார் பேசும்போது முகத்துக்கு நேராக முகம் வைக்க முடியாது.

தென்னாட்டார் சுத்தமாய் இருப்பதை விரும்புகிறார்கள். வடநாட்டார்

(தொடர்ச்சி 10-ம் பக்கம்)

குடி அரசு

12—2—49 சனிக்கிழமை.

அழுத பிள்ளை பால் குடித்தது! ஆனால்...............

இந்த மாதம் 9-ம் தேதி தூத்துக்குடித் துறைமுகத்தில் "ஏர்ஸ்டீமர் அண்டு ஜெனரல் ஏஜன்ஸீஸ் லிமிடெட்" கம்பெனியாரின் முதல் கப்பலுக்கு, கவர்னர் ஜெனரல் ஆச்சாரியாரால், மறத்தமிழன் வ. உ. சி. யின் பேர் சூட்டப்பட்டிருக்கிறதே, இதை எண்ணும்போதுதான் அழுத பிள்ளை பால் குடித்தது என்று சொல்லவேண்டியவர்களாயிருக்கிறோம். ஆனால் பிள்ளைக்கு வயிறு நிரம்பிவிடுமா? வளர்ச்சியடையப் போதுமானதுதானா? பிள்ளை செழித்து வளரவேண்டுமென்கிற நல்ல நோக்கத்தோடு, பூரிப்போடு பீறிட்டெழுந்த நற்றாயின் பால் ஆகிவிடுமா? என்றும் உடனேயே கேட்கவேண்டியவர்களாயும் இருக்கிறோம்.

வேதியர்களின் கூட்டுறவால் இந்த நாட்டு வேந்தர்களின் பரம்பரை, ஒருவரோடு ஒருவர் பகைத்து ஒவ்வொரு பிரிவினரும் தத்தம் நிலை குலைந்து, சிதறுண்டு சீரழிந்துகிடந்த நிலையைப் பற்றுக்கோடாகக் கொண்டு, அதே வேதியர்கள் கைநீட்டி வரவேற்க ஆறாயிரம் மைல்களுக்கப்பாலுள்ள வெள்ளையர், அசைத்துவிட முடியாது என்கிற உறுதியோடு அரியதொரு சாம்ராஜ்ஜியக் கோட்டையை நிறுவினார்கள் என்றாலும், அதன் ஆணிவேர் வெள்ளை வியாபார வேந்தர்களே. இந்தக் கோட்டையை இடித்துத் தகர்க்க வேண்டுமென்றால், இவ்வணிகத் துறைக்கு மூலபலமாயிருக்கும் கப்பல் தொழிலை நாம் கைப்பற்ற வேண்டும். இதை இந்நாட்டிக்குணர்த்தியவர்—இந்தியா முழுமைக்தும் பறை சாற்றியவர்-ஓர் ஒரு திராவிடர்! அவர் மறத் தமிழர் சிதம்பரனார்!

உத்தமர் காந்தியாரால், "பரதேசப் பொருள்களைப் பகிஷ்காரஞ் செய்யுங்கள்!" என்று உரைக்கப்பட்டதற்கு முன்னாலேயே 'வெள்ளையனின் வியாபாரத்தை விட்டொழியுங்கள்!' என்று வேண்டியவர் வீரர் சிதம்பரனார்! விட்டுவிட்டால் வேறுவழி என்ன? என்று ஏங்காதீர்! சுதேசி ஸ்டீம் சர்வீசை ஆரம்பித்திருக்கிறேன்! சுயமரியாதையுடன் ஒத்துழைப்பீர்! என்று சொல்லால் மட்டுமல்ல, செயலால் 1906-ல் செய்து காட்டிய வீரர் அவர்!

சுதந்தரப் போரில், வெள்ளை வணிகரோடு போட்டியிட வேண்டும்; வெள்ளையரின் கடலாதிக்கத்தை விரட்டியடிக்க வேண்டும் என்கிற சிந்தனை, வீரர் சிதம்பரனாரைத் தவிர வேறு எவருக்கும் ஏன் உண்டாகவில்லை? சுதந்தர வெறிக்குப் பேர்போனவர்கள், வங்காளியரும் மற்ற வடநாட்டினரும்தான் என்று, இன்றைக்கும் ஒப்புக்கொண்டு பேசும் நம் ஏமாந்த காங்கரஸ் திராவிடர்கள், இதை எண்ணிப் பார்க்கவேண்டும்!

கடலாதிக்கத்தைக் கைப்பற்ற வேண்டும் என்கிற எண்ணம்—அதற்கான நெஞ்சுரம்—திராவிடனுக்கு இயற்கையாய் அமைந்தது. ஏன்? அது அவன் உரிமை!

மூன்றுபுறங்களிலும் கடலால் சூழப்பெற்ற நாடு திராவிட நாடு! பரம்பரையாக மூவேந்தர்களும் கடலாணை செலுத்திய நாடு நம் தென்னாடு! கடல்கள், மன்னர்களின் கால்களை வணங்கிய நாடு என்று, கவிவாணர்களால் புகழ்ந்தேத்தப்பட்ட நாடு இது! "திரைகடலோடியும் திரவியம் தேடு!" என்னும் முதுமொழியைச் சிறப்பாகக் கைக்கொண்ட நாடு நம் நாடு! இந்த நாட்டுக் கப்பல்கள், இக்காலத்திய இயந்திர சாதனங்கள் அமையப்பெற்றவை என்றில்லாவிட்டாலும், ரோமரும் யவனரும் வியக்க, நடுக் கடலில், பாய்மரக் கப்பலைக் கொண்டு, நீர்கிழியப் பாய்ந்து சென்றவர் நம் தென்னாட்டார்! ஆயிரமாயிரம் ஆண்டுகளாக, அலைகடலை ஏவல்கொண்ட பரம்பரை திராவிட இனம்! நான்கு நிலத்தில், கடலை நெய்தல் நிலமாகப் பிரித்து, நானிலத்தோர் கொண்டாடும்வண்ணம் வாழ்ந்தவன் திராவிடன்! இதனை நெஞ்சில் நிறுத்தினால், இந்தக் கப்பலோட்டும் கருத்து வீரர் சிதம்பரனார்க்கு மட்டும் ஏன் உண்டானது? மற்ற வடநாட்டுச் சுதந்தர வெறியர்களுக்கு ஏன் உண்டாகவில்லை? என்கிற கேள்வி எழாது!

தமிழ்ப் பற்றும், தமிழினப் பற்றும் கொண்ட அறிஞர் சிதம்பரனார்—நாவன்மை படைத்த நாவலர் எனப் பேர்பெற்றிருந்தும், வருவாயைப் பெருக்கும் வழக்கறிஞர் வேலையைக் கைவிட்டு, படைபலமும் பணபலமும் மிகுந்த வெள்ளை ஏகாதிபத்தியத்தோடு போட்டியிடத் துணிந்தார் என்றால், அது, பிறகு உண்டான சிந்தியா கம்பெனியாரைப் போன்ற வியாபார நோக்கத்தோடு என்று யார்தான் கூறிவிடமுடியும்? பரம்பரையான நம்முரிமை, வெள்ளையனால் பறிக்கப்பட்டு விட்டதே என்கிற உரிமை வேட்கையும், சுயமரியாதையுமல்லவா இவ்வெழுச்சிக்குக் காரணம்? இந்த உரிமை வேட்கையினால் — சுயமரியாதை உணர்ச்சியினால் நெஞ்சுரத்தோடு இதில் ஈடுபட்டார் என்றாலும் அவரடைந்த பலன் என்ன? "நன்றி கெட்ட நாட்டிற்காகவா, நான் இந்த முயற்சியில் ஈடுபட்டேன்" என்று சிறையிலுழன்று செக்கிழுத்தபோது எண்ணாவிட்டாலும், சிறையினின்றும் வெளியேறியபின் தேசியத் தோழர்கள்-தேசிய முன்னணி வீரர்களான பார்ப்பனர்கள் கைவிட்டபோது, உள்ளம் நைந்து நைந்தல்லவா இறந்தொழிந்தார்? அந்த வீரனுக்கு, அந்த வீரனைப் போன்ற எண்ணற்ற பலர் ஈந்த உயிர்த்தியாகத்தினால் விளைந்த சுயராஜ்ஜியம் என்று சொல்லப்படும் இக்காலத்தில் செய்ய வேண்டிய நன்றி யென்ன? காட்டு

வேண்டிய மரியாதை என்ன?

நன்றியும் மரியாதையும் தான் நாளது மாதம் 9-ந்தேதி நடந்த பெயர் சூட்டல் என்கின்றனர். அதைத்தான் அழுத பிள்ளை பால் குடித்தது என்கிறோம் நாம்.

ஏன்? சுதந்தர நாட்டில், பிற நாட்டுக் கப்பல்களை விலைக்கு வாங்கி, அதன் பழைய விலாசத்தை மாற்றிப் புதுவிலாசம் கொடுப்பது என்கிற சடங்கு, ஒன்று, இரண்டு, மூன்று எனப் பல நடந்து விட்டன. தியாகத்திற்கு மதிப்பு வைக்கும் போக்கு இந் நாட்டுத் தேசிய சர்க்காருக்கு உண்டு என்றால், தேசீயம் வியாபாரம் செய்யப்படுகிறது என்பது உண்மையில்லை என்றால், இந்த நாட்டின் முதல் கப்பலுக்குச் சிதம்பரனார் பெயரல்லவா சூட்டப் படவேண்டும்? ஜல உஷாக்களும் ஜல பிரபாக்களும், தில்லிகளுமா செய்ந் நன்றியைக் காட்டும் முறை, என்னும் திராவிடனின் ஏக்கமல்லவா,—உள்ளக்குமுறலல்லவா இந்த எஸ். எஸ். வ. உ. சிதம்பரம்? ஆகவே தான் அழுத பிள்ளை பால் குடித்தது என்கிறோம், மேலும் அதை அன்புப் பால், இல்லை என்றும் கூறுகிறோம்.

ஏன்? பெயர் சூட்டிய ஆச்சாரியாரே பேசுகிறார், அதை முதலில் கேளுங்கள்.

"தூத்துக்குடிக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு இப்போது பரிகாரம் ஏற்பட்டு விட்டது''

இது ஆச்சாரியார் மனவேதனையோடு, மறைக்க முடியாது என்கிற நிலையில் கூறியிருப்பதாகும். மேலும் வெள்ளையர் இழைத்த அநீதியா? வடவர் இழைத்த அநீதியா? என்கிற உண்மையை, உணர்ந்து கொள்ளுகிறவர் உணர்ந்து கொள்ளட்டும் என்கிற மனதைரியத்தோடு, மறைத்துக் கூறப்பட்டிருப்பதுமாகும்.

வெள்ளையன் அநீதி இழைத்தான் என்றால், அது தூத்துக்குடிக்கு மட்டும் இழைத்த அநீதியல்ல, இந்தியாவுக்கே இழைத்த அநீதியாகும். இதை ஆச்சாரியார் நன்குணர்வார். அவர் கூறுகிறார் தூத்துக்குடிக்கு இழைக்கப்பட்ட அநீதி என்று. வடவர்களின் ஏகாதிபத்தியத்திற்குக் கண்காணியாய் இருந்து தீரவேண்டிய நிலையிலிருக்கும் ஆச்சாரியார், எப்படி வடவர்கள் செய்த அநீதி என்று வாய்விட்டுக் கூறிவிட முடியும்? ஆகவேதான் குல்லூகப் பட்டர் என்பதும் பொய்த்துவிடக் கூடாதே என்கிற எண்ணத்தோடு, "தூத்துக்குடிக்கு இழைக்கப் பட்ட அநீதி'' என்று பொதுவாகக் குறிப்பிடுகிறார்.

எப்படியோ, காலங்கடந்த இந்தச் செயலை—திராவிடர்களின் மனக் கொதிப்புக்காகச் செய்த செயலை, சிதம்பரனார்க்கு இழைக்கப்பட்ட-தேசிய வீரனுக்குச் செய்யப்பட்ட பெரும் அநீதி என்று, மறைமுகமாகவாவது ஒப்புக் கொள்கிறாரே, அதைக் கண்டு நாம் அவரைப்பாராட்டுகிறோம். ஆனால் "இப்போது பரிகாரம் ஏற்பட்டு விட்டது'! என்கிறாரே, இது உண்மையான பரிகாரந்தானா என்று நாம் அவரைக் கேட்கிறோம்.

அநீதி என்பதை உணர்ந்த ஆச்சாரியார்—திராவிடத்தின் ஆத்திரத்தை அறிந்த கவர்னர் ஜெனரல், மேலும் வேண்டிக்கொள்கிறார் திராவிடர்களை நோக்கி,

"சென்று போன காலத்திய மாற்சரியமும், அறியாமையும், துவேஷமும் ஒழிந்து போகட்டும்'' என்று.

இந்த இதோபதேசத்தைத்தவிர இந்திய யூனியன் கவர்னர் ஜெனரலிடத்து வேறு எதை எதிர்பார்க்க முடியும்?

ஆனால் இதோபதேசங்களால், திராவிடரின் உரிமை வேட்கைத் தீயைத் தணித்து விடலாம் என்று, உண்மையாகவே நம்புகிறாரா என்றுதான் நாம் கேட்கிறோம்.

இப்போது வ. உ. சியின் பேர் கப்பலுக்குச் சூட்டப்பட்டிருக்கின்றதென்றால், அதாவது மத்திய அரசாங்கம் என்கிற தாயினால், மாகாண அரசாங்கக் குடிகள் என்கிற பிள்ளைக்குப் பெருமை தரக் கூடிய வகையில், பெயர் சூட்டுதல் என்கிற பால் கொடுக்கப்பட்டிருக்கிறதென்றால், இந்தப் பாலானது மாகாண மக்கள் அழுத அழுகைக்குப் பிறகுதான் கொடுக்கப்பட்டிருக்கிறது! அதுவும் குழந்தையின் வளர்ச்சிக்கு, காலமறிந்து, பாலூட்டவேண்டிய நேரத்தை எண்ணிக் கொடுக்கப் பட்ட உத்தமத் தாயின் போக்கோடு அல்ல! அழுத வுடனேயே பால் கொடுக்கும் மத்திமத் தாயின் போக்கும் இதுவல்ல! அழுதழுது ஓய்ந்த பிறகு [அடுத்து வரவிருக்கும் தேர்தலை எண்ணி] அந்நியத் தாய் என்று பிறர் கருதிவிடுவார்களோ என்று கொடுத்த, ஒரு அதமமான தாய் என்றே திராவிடன் தெளிவாக உணர்ந்து விட்டான் என்பதை, நாம் ஆச்சாரியாருக்கு வற்புறுத்திக் கூறுகிறோம்.

திருக்குறள் அறிவு

II.

"அண்ணல்''

அறிவு எது?

அறிவு எது? என்று நாம்ஆராய்ந்து அறியவும், நமக்கு அந்த அறிவே துணையாக இருக்கிறது. மதவாதிகள் கடவுளையடையக் கடவுள் தான் வழிகாட்ட வேண்டும் என்று கூறுகிறார்களே, அவர்கள் அறிவையடைய அறிவுதான் வழிகாட்ட வேண்டும் என்றால் ஒத்துக் கொள்வார்கள். ஆனால் தங்கள் இயற்கை அறிவு திரியப் பெற்றதால், இன்னும் குருடும், குருடும் சேர்ந்து குருட்டாட்டம் ஆடும் நிலையிலேயே இருக்கிறார்கள். அவர்கள் கண்ணையும் வள்ளுவர் திறந்துவிடுகிறார். அறிவு ஒளியைக் காட்டுகிறார்!

மனம் வேறு, அறிவு வேறு என்றாலும் மனத்திற்கும், அறிவிற்கும் உள்ள தொடர்பை நாம் அறிந்து கொள்ள வேண்டும். மனம், தான் விரும்புவதே நல்லது என்ற முடிவுக்கு வரும். அறிவு அப்படி அல்ல. மனம் விரும்புவது எது, வேண்டுவது எது என்பதை ஆராய்ந்து, அதை நூலறிவோடும், உலக அறிவோடும் ஒப்பிட்டுச் சரிபார்த்து, குணத்தையும், குற்றத்தையும் சீர்தூக்கிப் பிறகுதான் நல்லது, கெட்டது என்ற முடிவுக்குவரும். மருந்தை உடலு வெறுத்தாலும், உள்ளம் மறுத்தாலும், அறிவு விரும்பும். ஏன்? நல்லது என்று அறிவதால். எனவே மனதை அறிவின் வழிச் செலுத்துபவன் அறிஞனாகவும், அறிவை

மனதிற்கு அடகு வைத்துவிட்டுப் பயந்து அதன்படி நடப்பவன் பேதையாகவும் ஆகிறான். குதிரையை இடமறிந்து, நேரமறிந்து செலுத்தும் வாதுவனைப்போல அறிவு வேலை செய்ய வேண்டும். நம்மையும், நம் மனத்தையும் "சென்ற விடத்தாற் செலவிடாது தீதொரீஇ; நன்றின் பால் உய்ப்பது அறிவு" அதுமட்டும் அல்ல. "அறிவு" என்றால் அது ஆவதை—வருவதை முன்கூட்டியே அறிய வேண்டும். இன்றேல் வைக்கோல் போரின்முன் வைத்த தீ, எவ்வாறு உடனே அப்போரையே அழித்து விடுமோ அதுபோல நம் வாழ்வையே அவ்வறிவின்மை அழித்து விடும் என்கிறார் வள்ளுவர். எனவே "அறிவுடையார் ஆவதறிவார், அறிவிலார் அஃதறி கல்லாதவர்" என்பது நிச்சயமாகிறது. அவ்வாறு நிகழ்கால நிகழ்ச்சிகளாலும், முன்நடந்த செயல்களாலும், சூழ்நிலையாலும் வருங்காலத்தைப் பற்றி அறிந்து கொண்டால் அவர்களுக்குத் துன்பமே இல்லை. "எதிரதாக் காக்கும் அறிவினார்க்கில்லை அதிரவருவதோர் நோய்", என்பது குறள். இனி அந்த அறிவு அஞ்சுவதற்கு அஞ்சவேண்டும். அஞ்சவேண்டாததற்கு அஞ்சக் கூடாது. பழி செய்யவோ கொலை புரியவோ, 'லஞ்சம்' பெறவோ, வஞ்சனை செய்யவோ நாம் அஞ்சாது நடந்தால் அதற்கு அஞ்சாமை என்றோ, அறிவென்றோ அர்த்தமில்லை. அது பேதைமை என்கிறார் வள்ளுவர்.

அஞ்சுவது அஞ்சாமை பேதைமை; அஞ்சுவது
அஞ்சல் அறிவார் தொழில்.

இனி, ஆவது அறிவதோடு மட்டும் அன்றி உள்ளதை—உண்மையானதை—அறிய வேண்டும். நாம் கேட்கும் பேச்சிலும், நாம் காணும் பொருள்கள் அனைத்திலும் உண்மையை அறிய வேண்டும். எப்பொருளை யார் யார் சொல்லக் கேட்டாலும்; யார் யாரிடம் சொல்லக் கேட்டாலும் அந்தப் பொருளின் உண்மைத்தன்மையை நுணுகி அறியவேண்டும். வஞ்சகன் நயமாகப் பேசலாம், நல்லவன் கடுகடுத்துப் பேசலாம், முட்டாள் சந்தர்ப்பவசத்தால் உயர்ந்த கருத்தைக் கூறலாம், அறிஞனின் செயலும், பேச்சும் சிலசமயம் நமக்கு அய்யத்தை உண்டாக்கலாம். பேசுபவன் அழகனாக இருக்கலாம், அல்லது குருடனாக, செவிடனாக அழகிழந்தும் இருக்கலாம். ஆனால் 'உருவுகண்டு' இகழாது, புகழாது "எப்பொருள் யார், யார் வாய்க்கேட்பினும், அப்பொருள்—மெய்ப்பொருள் காண்பது அறிவு. பிறர் கூறும் சொற்களைமட்டும் அன்றி, நாம் ஒவ்வொரு பொருளையும் ஆராய்ந்து, அதன் உண்மையான இயல்பையும், அது பயன்படும் முறையையும் ஆழ்ந்து அறியவேண்டும். பாம்பைப் பழுதென்றும், பழுதைப் பாம்பென்றும் மாற்றி உணர்வது ஒளி மங்கிய நேரத்திலோ, அல்லது கண் மங்கிய காலத்திலோ நேரும். அதுபோல அறிவு மங்கிய நேரத்தில் நமக்கு ஒன்று, மற்றொன்றாகத் தெரியும். அய்யம் வலுக்கும். அப்படியின்றி, நன்கு உண்மையை அறிந்துகொள்வதே 'அறிவா'கும். உலகை,நாம், காணுவதுபோலத் தட்டையல்ல. உருண்டையென்று அறிந்ததும், பூமிதான் சூரியனைச் சுற்றுகிறது என்பதை அறிந்ததும் உண்மை அறிவின் விளைவே. "எப்பொருள் எத்தன்மைத்தாயினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு"

இனி இவ்வாறு நாம் நுணுகி அறிபவற்றைப் பிறர்க்கு விளங்கும்படியும், அவர் மனத்தில் பதியும்படியும் எளிய சொற்களால், தெளிவுபடச் சொல்லவேண்டும். அவ்வாறே பிறர் சொல்லும் கருத்துக்களை, அவை நுண்பொருளவாய்க் கடினமாக இருந்தாலும், நாம் அதை எளிதில் உணர்ந்து புரிந்துகொள்ளவேண்டும். அதற்குத்தான் அறிவு என்று பெயர். 'எண் பொருளவாகச் செலச் சொல்லித் தான் பிறர்வாய் நுண் பொருள்காண்பதறிவு''. இன்னும், நாம் இவ்வுலகில் தோன்றியது முதல் நமக்கு ஏற்படக்கூடிய பேதைமைகளை நீக்கி,நம் இயற்கை அறிவை உலக, நூல் அறிவுகளின் மூலம் வளர்த்து மேன்மை அடைவதையே நம் வாழ்வின் செம்மையான குறிக்கோளாகக் கடைப்பிடிப்பதே சிறந்த அறிவு என்றும் வள்ளுவர் கூறுகின்றார்.

(அடுத்த இதழில்)

வருந்துகிறோம்.

தூக்கநாய்க்கன் பாளையம் தோழர் அட்டியண்ணக் கவுண்டர் அவர்கள் இந்த மாதம் 5-ந் தேதி இயற்கை யெய்தினார் என்கிற சேதி கேட்டுப் பெரிதும் வருந்துகிறோம்.

இவர் பல ஆண்டுகளாகவே பகுத்தறிவுப் பாடல்கள் இயற்றியும், இயக்க நடவடிக்கைகளுக்கும் தாராளமாகப் பொருளுதவி புரிந்தும் வந்த பெரியார் ஆவர்.

இவரின் பிரிவுக்கு நாம் வருந்துவதோடு, இவரது குடும்பத்தினருக்கும் நண்பர்களுக்கும் நம் அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

[7ம் பக்கத் தொடர்ச்சி]

மினுக்குவதையே விரும்புகிறார்கள்.

படிப்பு:- தென்னாட்டில் ஆங்கிலேயமும், தாய்மொழியும் விரும்பிக் கற்கப்படுகிறது. ஆனால் வடநாட்டிலோ உருது அல்லது உருதுடன் சேர்ந்த இந்தியையே விரும்புகிறார்கள். வடநாட்டார் தங்கள் மொழிகளை மிகவும் கண்ணியமாக எண்ணுவதால் மற்ற மொழிகளைப் படிக்க விரும்புவதும் இல்லை. உதாரணமாக அன்னிய மொழியைக் கற்றவர்கள் அதைப் பேசிக் கொண்டிருக்கையில் தென்னாட்டார் அதை ஆனந்தமாய் கேட்டுக்கொண்டிருப்பார்கள். ஆனால் வடநாட்டாரோ! பிறமொழிகள் பேசப் படுவதைக் கேட்டால் கேலி செய்து சிரிப்பார்கள்.

தலையில்:-தென்னாட்டார் தலையிலுள்ள முடியை இன்று கிராப்பாக வெட்டிக்கொள்கிறார்கள். வடநாட்டார் உச்சியில் பல முடிகளைமட்டும் விட்டுமற்ற இடங்களை மொட்டையடிக்கிறார்கள். படித்த வடநாட்டார் கூட கிராப்பின் மத்தியில் உச்சிக் குடுமி வைக்கிறார்கள்.

தென்னாட்டுப் பெண்கள் பெரும்பாலும் தலைமுடியைக் கொண்டை போடுகிறார்கள். வடநாட்டுப் பெண்கள் குழந்தைமுதல் கிழவிவரை சடை பின்னித் தொங்கவிடுகிறார்கள்.

தெய்வம்:- தென்னாட்டில் வணங்கும், சுப்ரமணியன், சுடலை, எசக்கி இன்னும் பல தெய்வங்களைப் பற்றியும், கம்பர், வள்ளுவர் போன்ற தென்னாட்டுப் புலவர்களைப் பற்றியும், வடநாட்டாருக்குத் தெரியாது. தென்னாட்டில் கொண்டாடப்படும் பொங்கல் பண்டிகையை வடநாட்டார் கொண்டாடுவதில்லை.

வடநாட்டார் உண்மை இந்துக்கள் என்றும், தென்னாட்டார் மனம்மாறிய இந்துக்கள் என்றும் வடநாட்டாரால் கருதப்படுகிறது. தென்னாட்டார்

ரோஜா முத்தையா

இந்து புராணங்களை அபூர்வமானதென்றும், கடவுள்கள் செய்த திருவிளையாடல் என்றும் எண்ணுகிறார்கள். வடநாட்டார் இந்தப் புராணங்களை பெரும்பாலும் தங்கள் குல அரசர்கள் செய்த தீரச்செயலென்றே எண்ணுகிறார்கள். தென்னாட்டில் சில மதங்களிருந்த போதிலும் யாரையும் எந்த மதத்தைச் சேர்ந்தவர் என்று இக்காலங்களில் சுலபமாகப் பெரும்பான்மையோரைக் கண்டு கொள்ள முடியாது. அதாவது ஆளைப்பார்த்து மதத்தைக் கண்டு கொள்ள முடியாது. ஆனால் வடநாட்டில் பல மதங்கள் இருந்தபோதிலும் ஒவ்வொரு மதத்தினரையும் பார்த்தவுடனே தெரிந்துகொள்ளலாம்.

காதல்:- தென்னாட்டிலுள்ள ஆண்கள் பெண்கள்மீதும், பெண்கள் ஆண்கள்மீதும்தான் காதல்கொள்வார்கள். ஆனால் வடநாட்டில் இயற்கைக்கு விரோதமாக ஆண்கள், 10-வயதுக்கு மேலும், 18-வயதுக்குக் கீழுமான வயதுள்ள ஆண் பிள்ளைகள் மேல் தான் காதல் கொள்கிறார்கள்.

தென்னாட்டில் பெரும்பாலோர் காதல் விவாகத்தை விரும்புகிறார்கள். பலர் அப்படியே நடக்க முடியவில்லை என்றாலும் காதலைப் புனிதமென்றாவது நினைக்கிறார்கள். ஆனால் வடநாட்டில் லட்சத்திற்கு ஒன்றுகூட காதல் விவாகம் நடப்பது மிக, மிக அரிது. ஏன் என்றால் வடநாட்டார் காதலை பாபமென்று எண்ணுகிறார்கள்.

விவாகம்:- தென்னாட்டில் பெண்களுக்கு 14-வயதுக்கு மேலும் ஆண்களுக்கு 18-வயதுக்கு மேலுந்தான் பெரும்பாலும் விவாகம் நடக்கும். ஆனால் வடநாட்டில் இன்னமும் பால்ய விவாகம் இருக்கிறது. தென்னாட்டில் விவாகம் செய்து கொள்ளப்போகும் பிள்ளைகளின் விருப்பப்படியே நடக்கும். வடநாட்டில் பிள்ளைகள் விருப்பம் கேட்கப்படுவதே இல்லை. தென்னாட்டில் விவாகம் ஆகும்முன் பெண்ணை ஆண் பார்க்கவும் ஆணை பெண் பார்க்கவும் உரிமை உண்டு. வடநாட்டில், விவாகம் செய்துகொள்ளப்போகும் ஆணின் வீட்டார் யாராவதுதான் பெண்ணைப் பார்க்கப்போவார்கள். ஆனால் பெண் பிள்ளைகள் நடக்கப் பழகுவதில் இருந்தே மூக்காடு இடப் பழக்கப் பட்டுவிடுவதால் இவர்களும் பெண்ணின் முகத்தைப் பார்க்கமுடியாது.

தென்னாட்டில் விவாகம் முடிந்த பின் பெண்வீட்டாருக்கும் மாப்பிள்ளை வீட்டாருக்கும் நெருங்கிய தொடர்பு உண்டாகும். வடநாட்டில் விவாகம் முடிந்ததும் எல்லாம் முடிந்துவிடும். தென்னாட்டில் பெரும்பாலும் தங்கள் குடும்பத்திலேயே— குடும்பத் தொடர்புடையவர்களிலேயே- தொடர்புடையவர்களுக்குத் தொடர்புடையவர்களிலேயே விவாகம் செய்துகொள்கிறார்கள். ஆனால் வடநாட்டில் தங்கள் குடும்பங்களுக்குள் விவாகம் நடத்துவதே கிடையாது. முன்பின் தெரியாத தன் ஜாதிக்காரர்களிடம்தான் தரகன்மூலம்விவாகம்ஏற்பாடாகிறது.

தொழில்:- தென்னாட்டில்பல ஜாதிப் பிரிவுகள் இருந்தபோதிலும் எந்த ஜாதிக்காரருக்கும் குறிப்பிடத்தக்க தனி வேலை கிடையாது. ஆனால் வடநாட்டில் தென்னாட்டைவிடப் பலமடங்கு ஜாதிகள் இருந்தும் ஒவ்வொரு ஜாதிக்கும் தனித்தனி குறிப்பிட்ட வேலைகள் உண்டு.

பெண்கள்:—தென்னாட்டில் பெண்களை வீட்டிற்கு எஜமானியாக மதிக்கப்படுகிறது. வடநாட்டில்பெண்களை ஆண்கள் உத்தியோக உயர்வுக்காகவும் போகப் பொருளாகவும் அடிமைபோல் நடத்தப்படுகிறது.

தென்னாட்டில் மூத்தவன் மனைவியைத் தாய்க்கு ஒப்பாக நினைக்கிறார்கள். ஆனால் வடநாட்டில் குடும்பத்திற்கு முதல் மனைவியாக உபயோகிக்கிறார்கள்.

தென்னாட்டில் இளையவன் மனைவியைத் தங்கை என்று நினைத்து நடத்துகிறார்கள். ஆனால் வடநாட்டில் இளையவன் மனைவி எல்லோருக்கும் சொந்தம் என்று நடந்து கொள்கிறார்கள்.

தன்மை:-தென்னாட்டாரிடம்அன்பினால் ஆவன செய்யலாம். வடநாட்டில் அன்பினால் எந்தக்காரியமும் செய்யமுடியாது. தென்னாட்டாரிடம் கோபமாய்ப் பேசினால் விரோதம் உண்டாகும். ஆனால் வடநாட்டாரிடம் சாந்தமாகப் பேசினால் விரோதம் உண்டாகும்.

தென்னாட்டார் தங்களை விரோதிப்பவர்களைமட்டும் விரோதிப்பார்கள். வடநாட்டார் தங்கள் இனத்தாரைத் தவிர மற்றெல்லோரையும் விரோதிப்பார்கள். தென்னாட்டார் மற்றவர்கள் மனம் நோக எதுவும் பேசமாட்டார்கள். வடநாட்டார் தங்களை ஒன்றும் செய்யமுடியாது என்று தெரிந்தால் எதிரியைப் பக்கத்தில் வைத்துக் கொண்டே எவ்வளவு மனம் நோகத் திட்டவேண்டுமோ அவ்வளவுதூரம் பேசுவார்கள். உதாரணமாக தென்னாட்டார் வடநாட்டானை காரணம் இல்லாமல் எதுவும் கேவலமாய்ப் பேசமாட்டார்கள். ஆனால் வடநாட்டாரோ, தென்னாட்டார் வடநாட்டில்வந்து பிச்சை எடுப்பது இன்னும்பல இழிவான தொழில் செய்வதைப்பற்றி, தென்னாட்டாரை வைத்துக்கொண்டே பேசுவதும் அல்லாமல், அப்படித்தானே என்று பக்கத்திலிருக்கும் தென்னாட்டாரையே கேட்பார்கள். வடநாட்டார் ஓர் நிலையில் நிற்பவர்கள் அல்ல. தென்னாட்டில் மதசம்பந்தமான எந்தக் கட்சியும் கிடையாது. ஆனால் வடநாட்டில் ஒவ்வொரு மதத்தினரும் அரசியலைக் கைப்பற்ற தீவிர முயற்சி எடுக்கிறார்கள். தென்னாட்டார் மானம் பெரிது என்று எண்ணுகிறார்கள். ஆனால் வடநாட்டினருக்கு மானம் என்பது இன்னது என்றே தெரியாது. உதாரணமாக தென்னாட்டில் யாராவது ஒருவர் செய்யத்தகாத செய்கை செய்துவிட்டால் 'உனக்கு மானம்உண்டா' என்று கேட்பார்கள். ஆனால் வடநாட்டிலே 'அழகைப்பார்' என்று சொல்லுகிறார்கள்.

தென்னாட்டில் யாவருக்கும் ஒரே நீதி உண்டு. ஆனால் வடநாட்டில் வழங்கப்படும் நீதியைத் தென்னாட்டு மிருகங்கள்கூட ஒத்துக்கொள்ளாது. வடநாட்டார், நீதி நியாயம், நேர்மை, மானம், வெட்கம் என்பதை கொஞ்சமும் அறியார்கள்.

"தென்னாட்டார் விரோதம் கொண்டிருக்கிறார்கள் என்பதை, அவர்கள் முகத்தில் இருந்து கண்டு கொள்ளலாம். ஆனால் வடநாட்டார் இதற்கு நேர்மாறானவர்கள். எதிரியை விரோதித்துக் கொல்லமாட்டார்கள். நேசித்துத்தான் கொல்வார்கள். கழுத்தை அறுக்கும் போதுகூட சிரித்துக் கொண்டுதான் அறுப்பார்கள்."

இவ்வாறு வடநாட்டார் குணங்களைப் பற்றி எழுதிக்கொண்டே போகலாம். ஆனால் முடிவே இருக்காது. ஆகையால் கடைசியாக, வடநாட்டார் குடும்பங்களுடன் குடியிருந்து பின் நாங்கள் குடியிருக்கும் இடத்திற்குத் தன் குடும்பத்துடன் வந்து சேர்ந்த ஓர் பார்ப்பன நண்பர் சொன்னவார்த்தையை மட்டும் எழுதி முடிக்கிறேன். அவரிடம் நீங்கள் ஏன் இங்கு வந்து விட்டீர்கள் என்று கேட்டோம். அதற்கு அவர் சொன்னபதில் "இந்த வடநாட்டார் வாழும் இடத்தில் வாழ்வதைவிட துஷ்ட மிருகங்கள் வாழும் காட்டில் தனியாக வாழ்வது சுலபம்" என்பதுதான். இதில் இருந்து இவர்களின் குணத்தை நீங்களே அறிந்து கொள்ளுங்கள். இத்தனை வேற்றுமைகளைப் பார்த்த அன்பர்கள் ஒற்றுமையை ஆவலுடன் எதிர்பார்ப்பார்கள் என்று நம்புகிறேன்.

ஒற்றுமை:- வடநாட்டாருக்கும், தென்னாட்டாருக்கும், அவயவங்களில் எவ்வித வேற்றுமையும் இல்லை. ஆனால் அதிலும் ஒரு வேற்றுமை! வடநாட்டார் பெரும்பாலும், பருத்த சரீரம் கொண்டவர்கள். தென்னாட்டார் பெரும்பாலும் மெலிந்த சரீரம் கொண்டவர்கள்.

"அழகன்".

(6ம் பக்கத் தொடர்ச்சி)

சமாதானப்புரளி.

26—6—1921 ஞாயிறு காலை பத்திரிகைகளில் லாயிட் ஜார்ஜ், டிவால்ராவுக்கு அழைப்புக் கடிதம் அனுப்பியிருப்பதாகவும் உடனே சமாதானம் ஏற்படப்போகிறதென்றும் செய்தி வெளியாயிற்று. மக்கள் யாவரும் மகிழ்ச்சி கொண்டனர். ஜூலை 11-ந் தேதி சமாதான ஒப்பந்தத்தில் கையெழுத்துச் செய்யப்பட்டது. புரட்சிப் படையும் பயமொழிந்து நடமாடலாயிற்று. ராணுவ ஆட்சியும் ஒழிந்தது. எங்கும் சமாதானக் கொடிகள் பறந்தன. 1921- டிசம்பரில் லண்டன் மாநகரில் சமாதான உடன்படிக்கைப் பத்திரத்தில் சர்க்கார் தலைவர்களும் ரிப்பளிக் தலைவர்களும் கையெழுத்திட்டனர். அப்போது மைக்கேல் காலின்ஸ் லாயிட் ஜார்ஜுடன் சந்தோஷமாகக் கைகுலுக்கினார். ஆனால் 22—8—22-ல் பாண்டனுக்குச் சமீபத்தில் காலின்ஸ் வழிமறித்துச் சுட்டுக் கொல்லப்பட்டார்.

அதிருப்திப் பேர்வழிகள்.

இந்த உடன்படிக்கையில் காலின்சும் ஆர்தர் கிரிப்த்தும் திருப்தி காட்டினர். ஆனால் டிவெல்ரா போன்ற சிலர் அதிருப்தி கொண்டிருக்கின்றனர் என்பதை இருவரும் அறிந்துதான் இருந்தனர். காலின்ஸ், நாட்டுக்குத் துரோகம் செய்து விட்டதாகச் சில ரிப்பப்ளிக்கர்கள் எண்ணினர். உடன்படிக்கையில் கையெழுத்திட்டவர்களைக் கொலை செய்வதாகப் பயமுறுத்தினர். புதிய உடன்படிக்கைப் படி ஏற்பட்ட ஆட்சி சபையில், ஆர்தர் கிரிப்த்தலைவராகவும், காலின்ஸ் நிர்வாக சர்க்காரின் பிரதம அதிகாரியாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

அய்ரிஷ்காரர்களை அடக்க அய்ரிஷ்காரர்களே நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டது, இத்தேச சரித்திரத்திலேயே இதுதான் முதல் தடவை. கலகங்கள் தலைகாட்டலாயின. ஒரு நாள் 11 கலகங்கள் ஏற்பட்டன.

தன் உயிருக்கு ஆபத்து நேரிடுமென்பதை காலின்ஸ் அறியலானார்.

எப்ரல் 14ல் ரிப்பளிக்படை, டப்ளினிலுள்ள பிரம்மாண்டமான கட்டடங்களைத் தம் வசமாக்கி, அவற்றைத் தங்கள் தலைமை ஸ்தானமாக்கிக் கொண்டனர். பயங்கரப் போராட்டத்திற்குப் பின்னரே காலின்ஸ் அவர்களைத் துரத்த முடிந்தது. இந்தக் கலகத் தலைவன் சிரச்சேதம் செய்யப்பட்டான். மைக்கேல் காலின்ஸ் எவ்வளவோ ஆபத்துகளுக்கெல்லாம் தப்பவேண்டியதாக இருந்தது. இருந்தும், அதிகாரிகளுக்குள் முதல் பலி அவரேயானார்.

வெடி குண்டுகளும் படுகொலைகளும்.

"மறுபடியும் அயர்லாந்தில் இரண்டு சர்க்கார் ஏற்பட்டது. அய்ரிஷ் ரிப்பளிக் படைக்குத் தலைவர் டிவால்ரா. ஆனால் அப்பதவியில் அவருக்குச் சந்தோஷம் ஏற்படவில்லை. ராணுவ அதிகாரிகள் தங்கள் இஷ்டம் போல் நடக்கலாயினர். நிர்வாக சர்க்கார் தலைவரான காஸ்கிரேவ் ரிப்பளிக் படைமீது தீவிரப் போர் தொடுத்தார். பலர் கைது செய்யப்பட்டனர். சிலர் மரண தண்டனையடைந்தனர். புதிய ஆட்சி சபை அங்கத்தினர்களில் பெரும்பாலோர் லண்டன் உடன்படிக்கையை ஆதரித்தனர். அதனால் ரிப்பளிக் அங்கத்தினர் எதிர்த்துப் போராட வேண்டியதாயிற்று. டெய்பர் டையின் உதவி அக்ராசனர் காயமடைந்தார். சபை அங்கத்தினர் வீடுகள் தீக்கிரையாயின. உள்நாட்டு உதவிக் காரியதரிசியை நடுபஜாரில் சுட்டுக் கொன்றனர். தந்திப் போக்குவரத்துக் கம்பிகளைத் தரித்தனர். ரயில்களில் தீ வைத்தனர். பொதுக் கட்டிடங்களை வெடி வைத்துத் தகர்த்தனர். இங்கிலாந்திலும் வெடி குண்டுப் புரட்சி நடந்தது. 150 அய்ரிஷார் நாடுகடத்தப்பட்டனர்.

டப்ளின் சர்க்காரும் தீவிர நடவடிக்கைகளைக் கைக்கொண்டனர். 69 ரிப்பளிக் வீரர்களை சிரச்சேதம் செய்தது. லியம்லிஞ்ச் என்ற பிரபல ரிப்பளிக் தலைவனைச் சிரச்சேதம் செய்தனர். அதன் உதவித்தலைவன் டான்பீரின் சிறையானான். டிவால்ரா தலைதப்பி ஓடினார். எதிர்ப்பது பிரயோசனமில்லை எனக் கண்டு போரைக்கைவிடும்படி தன்படை வீரர்களுக்கு உத்திரவிட்டார். ஆனால், வீரர்கள் இணங்கவில்லை. எங்கும் கொதிப்பும் பயங்கரப் போராட்டமும் நடந்தபடி இருந்தது.

டிவால்ரா கைது

பொதுத்தேர்தல் வந்தது. டிவால்ரா தேர்தல் பிரசாரம் செய்ய முன் வந்த போது கைது செய்யப்பட்டு, ஒரு வருடம் சிறைவாசம் அனுபவித்தார்.

ஒரு வருடத்திற்குப் பின்னால்—முன்பு சிறைசெய்யப்பட்ட அதே இடத்தில் அதேமேடையில் பிரசங்கம் செய்ய முன்வந்து "நான் கைது செய்யப்படும்போது விவரித்தபடி—" என்று பிரசங்கத்தை ஆரம்பித்தார். பொது ஜனங்களின் உள்ளத்தை வசீகரித்தது. இப்போது பிரசாரம் செய்யப்புறப்பட்ட டிவால்ராவுக்கும் முன்னிருந்த புரட்சி டிவால்ராவுக்கும் நடவடிக்கைகளில் மாறுதல் காணப்பட்டது. இப்போது டிவால்ரா பலாத்காரத்தில் நம்பிக்கையிழந்தார். சட்ட சபைகளின் உதவியை நாடினார்.

அய். ஆர். ஏ. புரட்சி

1932-ல் பியான பெய்ல்க் கட்சியை ஸ்தாபித்து டிவால்ரா ஆதிக்கம் பெற்றார். ரிப்பளிக் படைகளுக்கும் இவருக்கும் மனஸ்தாபம் ஏற்பட்டது. அதனால், தான் முன் தலைமை வகித்து நடத்திய அதேபடையை இப்போது நாடு கடத்தினார். அவர்களோ பழைய ரகசிய வழிகளைப் பின் பற்றினர்.

பகுத்தறிவு வாசகசாலை.

மதுரை பிப். 2.

மதுரை சுப்பிரமணிய புரத்தில் நேற்று பகுத்தறிவு வாசகசாலை ஆரம்பிக்கப்பட்டது.

வாசகசாலையின் நோக்கங்கள் என,

1. ஜாதிமதகட்சி பேதமில்லாதவாறு அனைவருக்கும் அறிவுவளர்ச்சியைப் பெருக்க ஆவன செய்தல்.
2. அறிவியக்கப்பாடல்கள் எழுதுவது, அறிவியக்க நாடகங்களுக்கு ஆக்கம் கொடுப்பது.

இதற்குத்தலைவர் காசிநாதன், துணைத்தலைவர் வி. பெரிய நாயகம், பொதுச் செயலாளர் பி. கே. சேதுராமன், கூட்டுச்செயலாளர் நாகசுந்தரம், பொருளாளர் ஏ. கெ. பாண்டியன், தொண்டர் தலைவர் வி. கோவிந்தன் மற்றும் 15 நிர்வாக உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தென்னாடு

மாதவெளியீடு.

"ஆசிரியர்" எஸ். கே. சாமி.

[தென்னாடு ஆபீஸ், சாக்கோட்டை, குடந்தை. தனிப்பிரதி 2-அணா. ஆண்டுக்கு ரூ. 1—8—0]

பகுத்தறிவுப் பாடசாலையின் ஆசிரியராய் நின்று உழைத்து வரும் தோழர் சாமி அவர்களை இயக்கத் தோழர்கள் பெரும்பாலோர் அறிவர். கொள்கையில் விடாப்பிடியோடு, பகுத்தறிவுப் பயிற்சியளிக்கும் திறனும் அமையப் பெற்ற இவர், இதன் ஆசிரியராய் இருப்பதும், குடி அரசு, விடுதலை எழுத்துத் திருத்தங்களைப் பின்பற்றியிருப்பதும் குறிப்பிட வேண்டியவை.

பெரியார், மறைமலையடிகள் ஆகியோரின் கருத்தோவியங்களோடு, மொழிபெயர்ப்பும், சிறுவர் பகுதியும், கஸ்டமரின் பழக்கநடையும் முதலிதழை அழகுபடுத்துகின்றன. கவிதை, கதைகளும் இடம் பெற்றிருக்கின்றன.

நிலைத்து நின்று பணியாற்றத்தோழர்களின் ஒத்துழைப்பும் ஆதரவும் வேண்டும். தென்னாடு வளர்க! வாழ்க என வரவேற்கிறோம்.

வரப்பெற்றோம்.

காலெண்டர்.

ஈரோடு அசோகா இண்டஸ்ட்ரீஸார் வெளியிட்டிருக்கும் அழகிய மூன்று வர்ணக் காலெண்டர் ஒன்று வரப்பெற்றோம்.

(4ம் பக்கத் தொடர்ச்சி)

தாலி கட்டாத கணவன். அவன் வாழ்க்கைப் பாதையிலே நேராக ஓடிக் கொண்டிருந்தான்.

* *

அன்றோர் நாள் மாலை! விடாத மழை அடாது பெய்து கொண்டிருந்தது. வழக்கம்போல் அன்று கிடைத்த சவாரியை இழுத்துக் கொண்டு தார் ரோடுகளில் ஓடிக்கொண்டிருந்தான் முனிசாமி. அவனது மேலெல்லாம் மழை கொட்டியது. அவன் அதையெல்லாம் 'சட்டை' செய்யவில்லை.

ஒரு ஆற்றுப் பாலம்; இதன் இரு புறமும் ஒரே இறக்கம். சவாரியுடன் இறக்கத்தில் ஓடிக் கொண்டிருந்தான் முனிசாமி. எதிரே இரு 'பிளசர் கார்'கள் போட்டா போட்டியுடன் 'சைய்ட்' கொடுக்காமல் வந்து கொண்டிருந்தன. பின்புறமாக வந்து கொண்டிருந்த பார 'லாரி, வேறு ஓயாமல் 'ஹாரன்' கொடுத்துக்கொண்டிருந்தது. வேகமாகத் தன் ரிக்ஷாவை இடதுபுறம் திருப்பினான் முனிசாமி. அதற்குள் எதிரே வந்துகொண்டிருந்த இரு 'பிளசர் கார்'களும் பக்கத்தில் வந்து விடவே, சட்டென்று தனது 'கால் பிரேக்கை,ப் போட்டுப் பார்த்தான்; முடியவில்லை. ஒரே வழுக்கல்; முனிசாமி ரிக்ஷாவுடனே கூட குப்புற விழுந்து விட்டான். மார்பில் பலமான அடி; பேச்சு மூச்சில்லை. நல்ல வேளையாக ரிக்ஷாவில் உட்கார்ந்த கனவான் பலமான காயங்களுடன் உயிர் பிழைத்தார். அதற்குள் அவ்விரு 'பிளசர் கார்'களும் சிட்டாய்ப் பறந்து விட்டன!

முனிசாமி இறந்துவிட்டான். அவனைச் சுற்றிலும் ஒரு பெரும் கூட்டம் கூடிவிட்டது. அவனுக்காக வருந்துவாரில்லை. ஆனால் அவனைப்பற்றி பலரும் பலவிதமாகப் பேசி பரிதாபப்பட்டனர். அதற்குள் போலீஸ் படையும் காவலுக்கு வந்துவிட்டது.

நடந்ததைக் கேள்விப்பட்டு அலறி அடித்து ஓடிவந்தாள் செல்லி. வந்ததும் முனுசாமியை அல்ல, அவன் பிணத்தைக் கட்டிக் கொண்டு அழுதாள். அவளைத் தேற்றுவார் கிடையாது; ஆற்றுவார் கிடையாது. அவள் அழுது கொண்டேதானிருந்தாள்.

செல்லியுடன் ஆனந்தமாகக் கைகோத்து வாழ்க்கைப் பாதையில் ஓடிக்கொண்டிருந்த முனுசாமி, இப்போது அதே வாழ்க்கைப் பாதையில் கிடக்கும் ஓர் 'தடைகல்'. அவனை— அல்ல, அந்தத் தடைகல்லை போலீசார் அப்புறப்படுத்தினர். பாதையில் கிடக்கும் தடைகல்லை அப்புறப்படுத்த வேண்டியதுதானே!

செல்லி அழுதழுது ஆராத்துயருள் ஆழ்ந்தாள். அவளுக்கு இனிமேல் யாரும் துணை கிடையாது. அவளைக் காப்பாற்றுவாரும் கிடையாது. முனுசாமி எப்படியோ வந்தான்; எப்படியோ போனான். இனிமேல் அவளது வாழ்க்கைப் பாதை எப்படிப் பட்டதாக இருக்குமோ, யார் கண்டது; பாவம்!

(3ம் பக்கத்தொடர்ச்சி)

னுக்குச் சீதை போயிருந்த இடம் தெரியாமல் அவதிப்பட்ட போது, அநுமான்தானே அந்த இடத்தைக் கண்டு பிடித்துக் காட்டினான்....?

வேலன்:-ஆமாம்ப்பா...!

வேவா:- ஸ்ரீ இராமனுக்கேன் சீதை போயிருந்த இடம் தெரியவில்லை என்று எந்தத் தமிழனாவது கேட்கிறானா...?

வேலன்:- இல்லையப்பா......! கேட்கவில்லையப்பா!!

வேவா:- அப்படியானால், நீ கேட்டியே என்னைப்பற்றிச் சந்தேகப்பட்டு! இந்தக் கேள்வியைக் கேட்கலாமாடா...?

வேலன்:- கேட்கப்படாது தான்ப்பா!!!

வேவா:-கேட்டது?

வேலன்:-தப்பு?

வேவா:-தப்புத்தானே?

வேலன்:-ஆமாம். தப்பு! தப்பு!! தப்பு!!!

[என்று கன்னத்தில் போட்டுக்கொள்கிறான்]

வேவா:-சரி! அப்படியானால், தப்பி ஓடிப்போ....

வேலன்:- [ஓட்டமாக ஓடுகிறான்]

வேவா:- [புன்னகை புரிந்து கொண்டே போகிறார்.]

காட்சி 33.

[தாசி வீடு.]

உறுப்பினர்:- வேவா [குடுகுடுப்பைக்காரன் வேடத்தில்] தாசி கமலா, இரஞ்சன், இராகவன், ஆடிட்டர்.

கதை அமைப்பு:- [வேவா குடுகுடுப்பை வேடத்துடன் தாசி கமலாபாய் வீட்டில் நுழைந்து உளவறிகிறான்.]

வேவா:- 'ஆய்! பத்ரகாளி...மகமாயி, வீராயி, பராசக்தி... அய்யோன்னு போச்சு ஒரு உயிரு, அய்யோன்னு போச்சு ஒரு உயிரு ...காட்டேரி பலி கேட்கிறாள்... இரத்தப்பலி கேட்கிறாள்...விடமாட்டாள்...சும்மாவிடமாட்டாள் ......

கமலா:- [பயத்துடன்] ஆயி...' மகமாயி!! அம்மணி!!! நீதானம்மே என்னைக்காப்பாத்தணும்! சாமி... உள்ளே வாங்க!—அய்யய்யோ... நான் ஏன் இந்தச் சனியனுளே போய் மாட்டிக்கிட்டேனோ...?

வேவா:- ஏ...! கமலா....!! என்னைத் தெரியலே...? நான்தான் உன் குலதெய்வம்...

இரஞ்சன்:- அடி கமலா! இவன் யாரடி? இங்கே எப்படியடி வந்தான்?

கமலா:- சும்மா இருங்க சனியன்களா! உங்களாலேதான் எனக்கு ஆபத்து வரப்போகுதுனு சொல்ல என் குலதெய்வமே இந்தக் குடுகுடுப்பைக்காரய்யா மேலே வந்திருக்குது...!

இராகவன்:- ஏண்டி கமலா! உன் குலதெய்வம் மன்மதச் சாமியாச்சேடி! இந்தக் குடுகுடுப்பைக்காரன் மேலே எப்படியடி வந்திருக்கும்?

ஆடிட்டர்:- ஏண்டி கமலா? இவன் மேலே மன்மதன் வந்து என்னடி பண்ணுவான்? இவன் கந்தத் துணி சுமக்கிறவன்தானேடி?

வேவா:- டேய்...!என்னைப் பரிகாசமா பண்ணுறீங்க? கெட்ட காலம் வந்துடுச்சு...இந்த பிளாக் மார்கட்காரனுங்களுக்கெல்லாம்... கெட்ட காலம் வந்துடுச்சு... கெட்டகாலம்... கெட்டகாலம்...

ஆடிட்டர், இராகவன், இரஞ்சன் } [பயந்து வணங்கி] அய்யய்யோ! மன்மதக் கடவுளே! மன்னிச்சுக்கோ!! தெரியாமே சொல்லிட்டோம்!!!

கமலா:- என் குலதெய்வக் கோலாகல லீலாவினோதக் காமாந்தகார மன்மதக் கடவுளே! உன்னை மண்டியிட்டு வணங்குகிறோம்! [எல்லோரும் மண்டியிட்டுக் கும்பிடுகின்றனர்] இப்போதே உன்புகழ் போற்றிப் பூசைகளெல்லாம் செய்து கொண்டாடுகிறோம்! எங்களை மன்னித்துக் காப்பாற்ற வேண்டும் சுவாமி!!!

வேவா:- அப்படியானால், மன்னித்தோம்...! இனி, நல்லகாலம் பிறக்குது...நல்லகாலம் பிறக்குது ...உம். எங்கே பூசைகளெல்லாம் ஆரம்பமாகட்டும்!

இராகவன்:- வாங்க சாமி

உள்ளே...! எல்லாம் தயாராகவே இருக்கு.

இரஞ்சன்:- உம். நடக்கட்டும் மன்மத பூஜா நாட்டியம்!

கமலா:- (13) [பாட்டு. 'ரிம்ஜும் பர்ஸே......' என்றமெட்டு.]

நானிந்த மன்மதக் கற்சிலைமேலே
நம்பிக்கை வைத்தேனே
நலிய எனை வீணே வீணே
விட்டிடாதுதானே (நா)
ஞானமில்லாப் பல ஈனர்கள்
செயலால்
விளைந்திடும் துயர் களைந்திடும்
மானமில் மூன்று மூர்த்திகள்
பலத்தை
அழித்திடும் தினம் ஒழித்திடும்
கானில் திகழ்முனி நாணிடுங்காமா
ககன சஞ்சார மாமா
கள்வர் கொன்ற கோரம் கோரம்
களைந்தென்னைக் காக்கும்...(நா)
ஆனந்தமும் பரமானந்தமும் சேர்ந்
தடைந்திடும் தடைஉடைந்திடும்
ஆபத்தெனும் கொலையாளிகள்
பழிகளை
அகற்றிடும் நலம் புகட்டிடும்
ஆணினும் பெண்கள்
தாழ்வென்பாரே
அறியாமை உணர்ந்திடாரே
மன்மதா நீ வாழ்க வாழ்க
மனம்போல வாழ்க............(நா)

வேவா:- [தாசி கமலாவின் ஆடல் பாடலில் மதிமயங்கிக் கிடந்த இரஞ்சன், இராகவன், ஆடிட்டர் முதலானோர்களிட மிருந்து சில ரிகார்டுகளையும், ரிவால்வாரையும் திருடிக் கொண்டு, கமலாவின் வீட்டிலுள்ள சில குறிப்புகளையும் எடுத்துக் கொண்டு மறைந்துவிடுகிறான்.]

காட்சி 34.

[சாலை.]

உறுப்பினர்:- புரட்சிக் கவிஞர்.

கதை அமைப்பு:- [புரட்சிகரமான கவியைப் கவிஞரொருவர் பாடிக் கொண்டே செல்கிறார்]

புரட்சிக் கவிஞர்:- (14) [பாட்டு 'பிரம்மன் எழுத்தினால்... என்ற மெட்டு]

தம்தம் இனத்தினால் அரசதே
புரிந்தாலே சுதந்தரமாமே
சுதந்தரமாமே தனி அரசாகும்
ஓதாய்
உன்னரசிதுவாமோ... (த)
உன்னதந்திகழவே
திராவிடரானோர்

ஆண்டனரிங்கே
முன்னொருகாலம்
ஆரியராம் கணவாய் வழியே
கால்நடையாய் வந்தாரிங்கே...(த)
திராவிடரை ஆரியர்
தாழ்த்திடவேதான்
வஞ்சகமே செய்தாரே
ஈனமதான மதபோதனைகள்
பேதமதே உதவாதே இனியே
நெஞ்சமதில் உணர்வாயே
தமிழா............ (த)

இந்தியும்-காந்தியும்!

★

"இந்தி மொழி—இலக்கிய வளமற்ற மொழி; அதுமட்டுமன்று-மாற்று மொழியுடன் இது கலக்கின், அம் மொழியின் மாண்பே மறைந்துபடும்."

—என்று அறிஞர்களும், வரலாற்று ஆசிரியர்களும் கூறிப் போந்தபின்பும் அம்மொழியைத் தலையில் தாங்கி தாண்டவமாடிடும் குறைமதி படைத்தோர் செயலை, என்னென்றுரைப்பது.

தேன்மொழி—தென்மொழியுடன் இவ்வின்னல்சூழ் இந்திதனைக் கலப்பதை நோக்குமிடத்து "பாலுடன் நஞ்சு—கலப்போர்" செயலென்றே நினைக்கவேண்டும்.

இக்கொடுமை புரிந்திடும் கெடுமதியாளர் அவ்வப்போது கூறிடும் விபரீத விளக்கங்களை ஈண்டு விரிக்கிற் பெருகும். ஆகவே, இவர்தம் இழிநிலை குறித்து இரங்குவதைத் தவிரவேறென்ன?

* *

ஒரு நாட்டின் முன்னேற்றம் அந்நாட்டின் மொழிநிலையைப் பொறுத்தே நிற்கும்.

* *

அயர்லாந்தின் விடுதலைக்கு அந்நாட்டுத் தலைவர்கள் எவ்வெவத்துறையிலோ முயன்றார்கள். அம் முயற்சிகளால் அவர்கள் வெற்றிபெற்றார்களில்லை. இறுதியில் அவர்கள் நாட்டுமொழியில் காதல்கொள்ளலானார்கள். அதனால் அவர்கள் வெற்றி பெற்றார்கள், இஃது உலகறிந்த தொன்று.

* *

நாடு என்பது மொழியை அடிப்படையாகக்கொண்டது. அம்மொழியை வஞ்சிப்பது பிறந்த நாட்டை வஞ்சிப்பதாகும்.

இது குறித்தே—உலகம் போற்றும் பெரியார் காந்தியாரும், தமது "நிர்மாணத் திட்டத்தில்;" "தாய்மொழி அபிவிருத்தி" என்ற ஒரு திட்டத்தையும் சேர்த்தார்.

இது அறியா—சர்தார் வேதரத்தின முத்துரங்க—அண்ணாமலைகளும் "இந்தி—இந்தி" என ஏனோ அலைகின்றனர்.

அந்தோ! அந்தோ! பரிதாபம்!! நிற்க,

1945-க்கு முன்பே "இந்தி சாஹித்ய சம்மேளனத்தினின்றும்"—

அதன் போக்கும் பாசிசப் பிடிப்பும் பிடிக்காததன் காரணமாகக் காந்தியார் தம் தலைமைப் பதவியையே ராஜினாமாச் செய்துவிட்டார்.

காந்தியார்மட்டும் இப்போக்கினைக் கண்டிக்கவில்லை.

நேர்மையில் நாட்டமும் நெஞ்சில் உரமுமுள்ள—ஒருசிலர் அவ்வப்போது மறைக்காது—உரைத்துத்தான் வந்தனர்.

1945-ல் தமிழ்நாட்டுக்கு வருகை தந்த—பலமொழிப் புலவரும் அ. இ. காரியக்கமிட்டி உறுப்பினருமாகிய தோழர் ஆச்சார்யா நரேந்திரதேவ்—

"வடநாட்டார் தென் நாட்டுமொழிகளில் ஒன்றை கற்றுக்கொள்ள முயற்சிக்காமல், தென்னாட்டில் இந்தியைப் புகுத்த முயற்சிப்பதில் ஒரு நியாயமும் கிடையாது."

என அழுத்தம் திருத்தமாகச் சென்னையில் பேசிய ஒரு கூட்டத்தில் தெரிவித்தார்.

அத்துடனில்லாது அவர்—தட்சிண பாரத இந்திப்பிரசாரசபைக்கு வருகை தந்தபோதும், "வடஇந்தியர்களும்—தென் இந்திய மொழியைக் கற்றுக்கொள்ளவேண்டும்; அப்பொழுது தான் வடஇந்தியர்களுக்கும்—தென் இந்தியர்களுக்கும் உண்மையான ஒற்றுமையை ஏற்படுத்தமுடியும்," என்றும் பேசியுள்ளார்.

பலமொழியில் புலமை பெற்றோர் போன்று, உரைத்தும்—வரைந்தும் வரும் முத்துரங்கவார்சுகளான முத்தண்ணாக்கள் இக்கருத்தினை உன்னுவார்களாக!

காந்தியார் கண்டித்த இம்மொழி ஆதிக்கத்தை—இவ்வாசிரியர் இத்திருநாட்டிடைப் புகுத்துவதன் காரணம் என்னை?

மொழி ஆதிக்கப்பித்தும்—ஒரே நாடு, என்ற—தனியாவேட்கையும் கொண்டு தானே!

இந்நிலை பாசிசத்திற்குக்—கால் கொள்வதாகுமே!

காந்தியாரின் நிர்மாணத்திட்டத்தை

ரோஜா முத்தையா

அரண் செய்வதாக இல்லையே இது! முரண்செய்வதாகவன்றோ தோன்றுகிறது.

இந்நிலையில், "துரதிருஷ்டவசமாகக் காந்தி நம் பக்கமில்லை—என்றாலும் அவர் விட்டுச் சென்ற ஒளி நமக்கு வழிகாட்டும்,"—எனக்கூறிக் காந்திப் பக்தர் போன்று இவ்வரசினர் ஏன் நடித்தல்வேண்டும்.

பாசிசப்பாதை—பயங்கரமான படுகுழிக்கு வழிகாட்டுகிறது என்று தெரிந்தும் ஏன் அவ்வழி நடக்கின்றனர்.

சரிதங்களை—: படிப்பதற்கும்-பட்பெறுவதற்குந்தானா உபயோகப்படுத்துவது?

உலகின் கண் அரசோச்சிய பலப்பல அரசினர்—எவ்வெவ் முறையில் தம் ஆட்சி முறையை அமைத்து வந்தனர். அவர் நடத்திய முறை சரியா? தவறா? எனக்கண்டு; தள்வன தள்ளிக் கொள்வனக் கொண்டு அரசோச்சுவதுதானே முறை?

இதற்காகத்தானே சரிதங்கள் ஆராய்ச்சி வல்லர்களால் வரையப் படுகின்றன.

தாய்மொழி காக்கும்—வீரர்களைத் தடிகொண்டு தாக்கும்—இவரோ! காந்திப்பக்தர்.

உரிமைக்காகப் போரிடும் உத்தமர்களை உருக்குலையும்படி உதைக்க உத்திரவிடும் இவரோ! காந்திப் பக்தர்.

வயிற்றிலே குழந்தை தவழுவது—புன்னகைதரும்-பூவையர்க்கு. ஆனால் புன்னகையை வீசி—புளகாங்கிதமடையாமல்—அறப் போர்க்களம் ஏகி—தமிழ்த் தொண்டாற்றிய கர்ப்பிணியை, கையைப் பிடித்து—கட்டாந்தரையில் அடிப்பதுதான் காந்தி வழியோ!—அன்றி இவரோ காந்திப் பக்தர்.

அறம்வழி—ஆட்சி நடாத்துங்கள் எனக் கூறிப் போந்த—உத்தமரின் பெயரைக் கூறிக் கூறி—அநீதி புரிந்திடும் இவ்வார்ப்பாட்டக்காரர் விரைவினில் கெட்டொழிவது ஒருதலை.

அறம் வெல்க—மறம் மடிக!

"மா. தங்கவேலர்"

சீர் திருத்தத் திருமணம்.

கரூர் பிப். 5-

நேற்றுக் காலையில் கரூர் தோழர் முத்துசாமியும் ஒடுகத்தூர் தோழியர் நாகம்மாளும் தோழர் கே. பாலையா தலைமையில் வாழ்க்கை ஒப்பந்தம் செய்து கொண்டனர். தோழர்களான கெ. ராமசாமி, கவுஸ்மியான் கொமரசாமி முதலியோர் சீர்திருத்தமணம் பற்றிப் பேசினர். இதன் நினைவாக குடி அரசுக்கு ரூ. 1. நன்கொடை அனுப்பப்பட்டது.

[வரப் பெற்றோம், நன்றி]

தணிக்கைப் போர்டா? தகனப் போர்டா?

தணிக்கை போர்டு. இது சென்னை மாகாண பிலிம்ஸ் தணிக்கை போர்டு. எந்த சினிமாப் படங்களும் ரிலீஸ் ஆகி வெளிவருவதற்கு முன் இந்த பிலிம்ஸ் தணிக்கைப் போர்டுக்குள் நுழைந்துதான் ஆகவேண்டும். அதில் அவர்கள் கத்திரிக்கோலைக் கையில் பிடித்து, வெட்டி எடுக்க வேண்டிய கட்டங்களைத் தங்கள் இஷ்டம்போல்வெட்டி விடுவார்கள். அவர்கள் அனுமதி கொடுத்த பின்தான் படங்கள் திரையுலகிலே காட்சி அளிக்கலாம். இந்த தணிக்கை போர்டுக்குப் பலர் உறுப்பினர்களாய் அங்கம் வகிக்கின்றனர். படங்களின் தலைவிதி இவர்கள் கையில்தான் இருக்கிறது. இதிலிருந்து படங்கள் தப்பி வரும்வரை படமுதலாளிகளுக்கு ஒரே கலக்கம்தான். இந்த பிலிம்ஸ் தணிக்கை போர்டு இருப்பது அவசியம்தானா? இவர்கள் செய்யும் வேலைகள் என்ன? செய்ய வேண்டியது என்ன? என்று சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இந்த பிலிம்ஸ் தணிக்கை போர்டு வேண்டாமென்று எவரும் மறுக்கவில்லை! இருக்க வேண்டியது அவசியத்திலும் அவசியம்தான். ஆனால் இவர்கள் கையில் பிடித்திருக்கும் கத்திரிக்கோல்களின் வேலைகள்தான் மக்களுக்குப் பிடிக்கவில்லை. இவர்களின் கத்திரிக்கோல் எங்கெங்கு வேலை செய்ய வேண்டும்! பிறப்பிலே உயர்வு தாழ்வுகள் கற்பிக்கப்படும் இடங்களுக்கு, கடவுள்களின் காமாந்தகார லீலைகள் தாண்டவமாடும் கட்டங்களுக்கு, பழமை கண்மூடிப் பழக்க வழக்கங்களுக்கு மக்களை இழுத்துச் செல்லும் படுபாதாளப் பள்ளத்திற்கு, ஆண்டவன் சிலையைக் காட்டிப் பணம் பறிக்கும் உலுத்தர்களின் கும்பல்களின் செயலைக்காட்டுமிடங்களுக்கு, மக்களை மாக்களாக்கும் கட்டத்திற்கு, மெல்லிய ஆடை முதல் முழுநிர்வாணங்களை போட்டி போட்டு அழகாக குளோசப் எடுக்கும் கட்டங்களுக்கு, பகுத்தறிவுக்கு முரணான கருத்துகள் நடமாடும் இடங்களில் பிலிம் தணிக்கைப் போர்டாரின் கத்திரிக்கோல் வேலை செய்ய வேண்டும். இது நியாயம். செய்ய வேண்டிய கடமையுங்கூட. ஆனால் என்ன செய்கிறது, இவ்வளவையும் அனுமதிக்கும் இந்தத் தணிக்கைப் போர்டு, **எவரேனும் துணிந்து** இரண்டொரு சீர்திருத்தக்கருத்துகளடங்கிய சமூகப் படங்களைத் தயாரிக்கலாம் என்று தயாரித்தால், அங்கே அவர்களது கத்திரிக்கோல் தலைகால் தெரியாமல் தாண்டவமாடுகிறது. சமூகச் சீர்திருத்தப் படங்கள் தணிக்கைப் போர்டுக்குள் வருகிறதென்றால் அவர்களது கத்திரிக்கோல் பன்மடங்கு சாணைக் கல்லில் தீட்டப்படுகிறது. சீர்திருத்தக் கருத்துக்கள் நாட்டிலே அதி தீவிரமாக எல்லாத் துறைகளிலும் பரவி வரும் இந்த நாளில், தமிழ்ப் படங்களிலே கடவுள்களுக்கு 144-போட்ட பிறபாடு, பொய்ப் புராண முட்டாள்தனமான புராணக் கதைகள் என்று மக்களுக்கு தெரிந்த பிறகு, இன்னும் இந்த தணிக்கை போர்டாரின் செயல் என் மாறவில்லை? பைத்தியக்காரன் தமிழ் படத்திலே திராவிடர் தளபதி அண்ணாத்துரை; "அய்யா" என்று பெரியாரை குறிப்பிடும் இடங்கள் கத்தரிப்புக்குள்ளாகியது ஏன்? அவர்கள் பெயரைக்கேட்க தணிக்கை போர்டாருக்குக் கிலியா? அதுமட்டுமல்ல அறிஞர் அண்ணாத்துரையால் எழுதப்பட்ட என்னெஸ்கே பிலிம்சாரின நல்லதம்பி; ஜூபிடரின் வேலைக்காரி தணிக்கை போர்டுக்குள் நுழைந்த பின் அநேக கட்டங்கள் கத்தரிக்கோலுக்கு இரையாகி இருப்பதாகச் சொல்லப்படுகிறது. இது உண்மையாக இருக்குமாயின் இன்னும் இதுபோன்றே கண் மூடித்தனமான செயல்கள் தொடர்ந்து நடைபெறுமேயாகில் தணிக்கை போர்டுகள் மக்கள் முன் கனப் போர்டுகளாகிவிடும். அறிவுக்கு பொருத்தமான தமிழ்படங்களை-மக்களுக்கு நற்கருத்தூட்டும் படங்களை-தமிழர்களின் மேன்மையை சித்திரிக்கும் படங்களை—இந்நாட்டின் அறிஞர்கள் எழுதிய அரிய கருத்துக்கள் அடங்கிய வசனக் கட்டங்களை கைவைக்கக் கூடாது. தணிக்கை போர்டு என்று எதற்கு இருக்கிறது என்றால் ஆபாச கட்டங்களையும், அறிவுக்குமுரணான கருத்துக்களையும் தடைசெய்வதற்கேயன்றி பகுத்தறிவுள்ள சமூகக்கதைகளை தடைசெய்வதற்கு அல்ல என்பதை தணிக்கை போர்டார்கள் உணர வேண்டும். இதில் ஜாதிமத பேதங்கள் கட்சி வேற்றுமைகள் அங்கு தலைவிரித்து தாண்டவமாடக்கூடாது. நாட்டு முன்னேற்றத்திற்கு [illegible]

சித்தர் சிரித்தார்!

★

''ஆஹா...ஹ்...ஹ்...ஹா...ஹ்... ஹா...''!

திரும்பிப்பார்த்தேன். சிரித்தது வேறு யாருமில்லை. நம் பழந்தமிழ் சித்தராகியசிவவாக்கியர்தான் அப்படிச் சிரித்தவர். ''என் சிரித்தீர்? எதைக் கண்டு சிரித்தீர்?'' என்று கேட்டேன் அவரைப் பார்த்து.

''நன்று கேட்டாய் மகனே! ஆஹா...ஹ்...ஹா...ஹ்...!''

''மீண்டும் சிரிப்பா? நன்று; நன்று. வெட்டெனச் சிரிப்பது வெள்ளறிவாளர்க்கன்றோ பொருந்தும்?''

''சற்றே எதிர்நோக்கிப்பார்! இப்புல்லறிவாளர் செய்கையைக் கண்ணுற்றேன். அறிவுக்குப் பொருத்தமில்லாத இச்செய்கைகளைப் பார்த்ததும் என்னையறியாமல்சிரித்துவிட்டேன்'' என்றார்.

சித்தர் காட்டிய திக்கில் என் பார்வையைச் செலுத்தினேன். ஒருகுளம். குளத்தின் நாற்றிசைகளிலும் குளித்து உடலழுக்கை அகற்றிக் கொள்ளும் மக்கள் கூட்டம். ஒரு சிலர் துவைத்த ஆடைகளை உலர்த்திக் கொண்டிருந்தனர்...''என்ன இதைப் பார்த்தாசிரிப்பது? சிரிக்க இதில் என்ன இருக்கிறது?''

''சினம் கொள்ளற்க! அதோ அந்த மேற்கு மூலையில் பார்''

சித்தர் காட்டிய திக்கில் என் கண்ணையும், கவனத்தையும் செலுத்தினேன்.

வழுக்கச் சிரைத்த தலை. தலை உச்சியில் ஒருசில மயிர். அவை காற்றுடன் விளையாடிக்கொண்டிருந்தன. மெய்யெல்லாம் திருநீற்றின் பூச்சு. இடையிலே ஒரு சிறு துண்டுத் துணி. முழங்கால் நீரில் நின்றுகொண்டு மூக்கைத்தொட்டும், காதைத்தொட்டும், வாயைப்பொத்தியும், கண்ணை மூடியும் திறந்தும் வாயால் எதையோ முணு முணுத்தும் அடிக்கடி நீரையள்ளி நீரில்விட்டும் தன்னை மறந்து எதையோ செய்து கொண்டிருந்த ஒரு ஆளைக் கண்டேன் சினங்கொண்டேன். திரும்பினேன் சித்தர்பக்கம். ''இதைப் பார்த்தா சிரிப்பது?''

''அன்ப ஆத்திரமேன்? அவர் சிறுபிள்ளையல்லவே? அவர் செய்வது என்ன?''

''அவர் செய்வது ஜபம்!''

''ஜபமா? அப்படியென்றால்......?''

உடல் அழுக்கைக் கழுவியபின் உள்ள (மன) அழுக்கை மாற்றுவதற்கு ஆண்டவனை வேண்டிச் செய்வது.''

''ஆண்டவனை வேண்டுவதற்கும் நீரையள்ளி நீரையள்ளி நீரில் விடுவதற்கும் என்ன சம்பந்தம்?''

''என்ன சம்பந்தமோஎனக்குத்தெரியாது! பழங்காலந்தொட்டு இப்படித்தான் செய்யவேண்டுமென்பது ஆன்றோர்களின் கட்டளை. அப்படிச் செய்வது எங்கள் குலப் பழக்கமுங்கூட.''

பழக்கத்தின் பேரால் பகுத்தறிவை அடகு வைத்துவிடுவதா? காரணமில்லாமல் காரியத்தைச் செய்வது பைத்தியத்தின் செயலல்லவா? பெரியோர் கட்டளையைப் பின்பற்றி நடக்கும்போது அறிவுக்கு உடன்பாடா என்பதை ஆராய வேண்டாமா? எந்தக் காரியத்தையும் ஆராயாது செய்வது ஆறறிவு படைத்த மனிதனுக்கு அழகல்லவே? சினம் வேண்டாம். சிந்தித்துப் பார்! அறிவுக்கு வேலைக் கொடுத்து ஆராய்ந்து பார்! உண்மையிருப்பின் கூறு! ஏற்றுக் கொள்கிறேன்.

''மனமாசை அகற்ற ஆண்டவனை வேண்டுவதாகக் கூறினாய்! ஆண்டவன் எனும்போது ஆண்டவன் என்றால் என்ன? அது எங்கு இருக்கும்? என்ற கேள்விகள் எழுவது இயற்கை. நாம் இவ்வுலகில் வாழவும், தாழவும், உண்ணவும், இருக்கவும் இறக்கவும் வசதி செய்தளிப்பது இயற்கையல்லவா? இயற்கையின் வயிற்றில் பிறந்த பிற உயிர் வர்க்கங்களில் மனிதன் சிறந்தவன், அவனுக்குப் பகுத்தறிவு இருப்பதால். அறிவால்தான் உழைக்கிறோம்; பிழைக்கிறோம். அறிவில்லாவிடில் நாம் மிருகமாக அல்லவோ வாழ்க்கை நடத்துவோம். எனவே அறிவே நம் ஆண்டவன். அதுவே நமது வழிகாட்டி. அறிவுக்குப் பொருத்தமற்ற எந்தச்செய்கையையும் செய்யாதிருப்பதே மனிதனின் பண்பு.

சிறியதோர் உபதேசம் முடிந்ததும் ஒரே சமயத்தில் நாங்களிருவரும் அந்த குளத்தின் மேற்கு மூலையை நோக்கினோம். முடுக்கிவிட்ட யந்திரம் போல் திரும்ப திரும்ப அதையே செய்து கொண்டிருந்தான், அந்த ''நீர்மாற்றி''

''ஆஹா...ஹ்...ஹா...ஹ்...ஹா!''

மீண்டும் சித்தர் சிரித்தார். நானும் உடன் சேர்ந்து சிரித்தேன். இது பரிகாசச் சிரிப்பல்ல, பகுத்தறிவைப் பரப்ப, அறியாமையை மாய்க்க, பகுத்தறிவுத் தந்தை சித்தர் சிரித்த சிரிப்பு.

திடீரெனச் சிரிப்பை நிறுத்தினார். முகத்தில் அமைதி நிலவியது. கண்களில் கருணை வழிந்தது. உதடுகள் அசைந்தன. கணீரென்ற குரலில் பாடல் கிளம்பியது.

அள்ளி நீரை யிட்டதேத தகங்கையிற்
குழைத்ததேது
மெள்ளவே மிணமிணவென்று
விளம்புகிற்கு மூடர்காள்!
கள்ள வேடமிட்டதேது கண்ணை
மூடிவிட்டதேது
மெள்ளவே குருக்களே விளம்பிடீர்!
விளம்பிடீர்!!

(சிவவாக்கியர் பாடல்)

''வேணுகோபால்''

குன்னூர்
மருத்துவ குல சங்கம்.

குன்னூர், ஜன. 20-

மவுண்ட் ரோட்டிலுள்ள சுயராஜ்யா சலவைக் கூடத்தில் இன்று தோழர் கந்தசாமி தலைமையில் கூடி, டை சங்கம் நிறுவப்பட்டது.

தலைவர்: ஆர். வாசுதேவன், துணைத்தலைவர்: எஸ். நாராயணசாமி, செயலாளர்கள்: எம். கந்தசாமி, எம். பி. மாணிக்கம், பொருளாளர்: எம். நடேசன், மற்றும் கமிட்டி உறுப்பினர்கள் அறுவர் தேர்ந்தெடுக்கப்பெற்றனர்.

மருத்துவ மக்களின் முன்னேற்றத்திற்கான பல தீர்மானங்களை நிறைவேற்றி அரசாங்கத்துக்கு அனுப்பப் பட்டது.

கட்டைகள் இருக்கக்கூடாது.

தணிக்கை போர்டு இந்த நாட்டின் பொதுஸ்தாபனம். தனிப்பட்ட யதேச்சாதிகாரிகளின் ஸ்தாபனமாக இருக்கக் கூடாது. சர்க்காரும் இன்றைய நிலையை உத்தேசித்து அதற்குரிய ஆட்களை அதில் தேர்ந்தெடுக்கவேண்டும். பொதுமக்களும் அது விஷயத்தில் கவனம் செலுத்த வேண்டும். தணிக்கை போர்டில் வேலை செய்கிறோம் என்று தங்கள் இஷ்டம்போல் வேண்டியதை செய்யக்கூடாது. மக்கள் நிலையை அனுசரித்து கால நிலையை உத்தேசித்து தணிக்கை போர்டார்கள் நடக்க வேண்டும், ஆவன செய்யவேண்டும். முன்வருவார்களா தணிக்கைபோர்டார்? ஆவன செய்ய முன் வருவீர்களா நீங்கள்?

''பா. ரத்தினசாமி''

Edited, Printed and Published by N. Karivaradaswamy at the Tamilian Press Old No. 42, New No. 59, Cutcherystreet, ERODE